போஸ்ட நெ. [illegible]

திராவிடநாடு

மலர் 13 | 21–11–54 | இதழ் 21

செல்லக்கிளி!

[அரங்கண்ணல்]

"கரும்பென்று நினைத்தேன்! இரும்பாகி என்னையே தாக்குகிறதே!!" என்று கலங்கினான், அம் மாவீரன். சிறு குடிசையிலே பிறந்து சிம்மாசனங்களை ஆக்கவும் அழிக்கவும் வல்ல, தீராதி தீரனாகத் திகழ்ந்த அவனைப்பற்றிப் போற்றிப் புகழாதாரில்லை! எதிரிகளுக்கு அவன் ஒரு வேல்! எந்தப்போருக்குச் சென்றாலும், வாகை சூடிவந்தான். சின்னஞ் சிறு படையைக் கொடுத்தாலும், அதனை உபயோகப்படுத்தும் சீரிய முறைகளால், ஜெயஸ்தம்பம் நாட்டினான்—சென்ற இடமெங்கும். 1717–1782, அறுபத்தைந்து ஆண்டுகள்! இடையிலே பிள்ளைப் பருவமாகவும், சில்லரைச் சேட்டைகளாகவும்கழிந்த32-ஆண்டுகள் போக, எஞ்சிய காலம் முழுமையும் எதிரிகளைத் தாக்கவும், கோட்டைகளை அடிமையாக்கவும், குமுறிடும் சீயம் போல உலவினான், நாட்டில். மைசூர்!–இப்போது, எழிலுக்கும், உல்லாசத்துக்கும் பெயர் பெற்ற சிறு அரசு. இந்த 'மைசூர்' ஏற்பட்டது எப்படி? வாளைமோதி, குருதியைக் கொட்டி, தியாகத்திலே நிறுவப்பட்டதல்ல, இந்த அரசு! அரசியல் உலகில், அந்தஸ்தையும் ஆடம்பரத்தையும் அள்ளி வழங்க, எந்தக் 'கருவி' பயன்பட்டு வருகிறதோ, அந்தக் 'கருவி'தான் இச் சிற்றரசை, உண்டாக்கிற்று.

1565-இந்திய சரித்திர ஏட்டிலே, இந்த ஆண்டை எவரும் மறக்கார்; குமரியின் அழகைப்போல, கோலாகலத்துடன் விளங்கிய விஜயநகர சாம்ராஜ்யம், தலைக்கோட்டை எனுமிடத்தில் நடைபெற்ற போரால், சுல்தான்களால் படுசூரணமாக்கப்பட்டது! கலை கொழித்த அழகாபுரி, என்பர், ஆராய்ச்சியாளர்கள். கலைக்குமட்டுமல்ல, இந்துமதம், தன்னுடைய புனரமைப்புக்கான பூமியாக விளங்கியதும் இங்குதான்! பிராமணோத்தமர்களின் பிரச்சாரகேந்திரம்போல் விளங்கிற்று, அன்று. நாடு முழுமையும் அலைபோல் வீசிய இஸ்லாத்தை எதிர்க்க, துங்கபத்திர நதிக்கரையை போர்முகாம்ஆக்கினர் புரோகிதாச்சாரிகள். இதன்விளைவுதான், அடிக்கடி சுல்தான்களுக்கும், விஜயநகர மன்னர்களுக்குமிடையே எழுந்த பூசல். 'தலைக்கோட்டை' இந்தப் பூசலுக்கு முடிவுகண்டது! சாம்ராஜ்யம் வீழ்ந்தது! விஜயநகரம் சிந்துபாடிடும் சோலையாக இருந்தநேரத்தில், அதன் ஆட்சியின் கீழ் பல கோட்டைகள் இருந்தன. அவைகளை விஜயநகர மன்னரின் தூதுவர்கள் பலர் 'பிரதிநிதி'களாகஆண்டுகொண்டிருந்தனர். 'உடையார்' பரம்பரை, மைசூர் வட்டாரத்துப் பிரதிநிதி! பேரரசு, 'தலைக்கோட்டை'யில் தனது ரதகஜ துரக பதாதிகளுடன் முழுமூச்சுடன் போரில் இறங்கிற்றென்று செய்தி எட்டியதும், ஒவ்வொரு பிரதிநிதிக்கும் அழைப்புச் சென்றது — தத்தமது, படை தளவாளங்களோடு, பாய்ந்து வரும்படி. மைசூராரும் சென்றார்! போர்க்களத்திலே நின்றார்! வெற்றியரசி, எதிரிகளின் பக்கம் சென்றுகொண்டிருக்கிறாள். தைரிய லட்சுமி, வீரலட்சுமி, தனலட்சுமி' தான்ய லட்சுமி, ஜெயலட்சுமி—என்று, எந்தெந்த லட்சுமிகளை நம்பி, 'இந்து மத சாம்ராஜ்யம் போர்க்களத்தில் இறங்கிற்றோ, அந்த 'லட்சுமி'கள் யாவரும், 'அல்லா ஒருவரே!' என்று நம்பும் இஸ்லாமியர் பக்கம் சென்று கொண்டுள்ளன என்பதை, உடையார் கண்டார்.

களத்திலே, கடும்போர்! உடையார், காரியவாதியானார்! தன்னுடைய வாழ்வில் சுகமும், போக போக்கியமும், அரும்பிடச் செய்யும், அரசியல் 'கருவி'யை, இதயத்தில் ஏந்தினார்! 'வெற்றிகரமாக'ப் பின்வாங்கினார்! விரைந்து சென்று, மைசூர் கோட்டத்தை தனியரசாக்கி, தான் மன்னரானார். துரோகத்தின் முடியிலே சுடர்விடும் அரசுத் திலகங்களிலே ஒன்றாயிற்று, அன்னை காவிரியின் அழகுத் தொட்டிலான, மைசூர்! அந்தஅரசின் ராணுவத்திலே, போர்வீரனாகச் சேர்ந்து புகழ்பலபெற்று, உற்றாரும் மாற்றாரும் கலங்கும் உன்னத வீரனாகத் திகழ்ந்து, சென்று, இடமெல்லாம் 'ஜயலட்சுமி'யைத் தெண்டனிடச் செய்து, தளபதியாகி, தான்வைத்ததே சட்டம் எனும் சர்வாதிகாரியானான், ஐதர்அலி—மைசூர் தனியரசு ஏற்பட்டு, இரண்டாவது நூற்றாண்டு விழா வந்துகொண்டிருந்த நேரத்திலே. அவனுடைய வீரம் தீரம்—பராக்கிரமம் பற்றிப் பேசாதோரில்லை. ஒரு பக்கத்திலே மராட்டியம்! மற்றோர் திசையிலே ஐதராபாத்! இடையிலே, மாட்டிக்கொண்டு, திறமையற்ற அரசர்களாலும், சுயநலமிக்க அமைச்சர்களாலும் துவண்டுகொண்டிருந்த, மைசூரின் மாசுபோக்கும் மாமணியாகத் திகழ்ந்தான். நாடே, அதிசயிக்கிறது, படிப்பு வாசனை அறியாதவன், இஸ்லாமியன், இவ்வளவு வீரதீரத்

தோடு விளங்கிவருவது கண்டு! ஆனால், அந்த வீரன், வேதனையின் பிம்பமாக உலவினான் ஒருநாள்! மந்தி, கையில் கிடந்த பூமாலையை எடுத்துவந்து, தூசுபோக்கி, சிகையில் வைத்துக்கொண்டிருக்கும்போது, அந்த மாலை — கருநாகமாகி, தலையையே கடிக்கிறதென்றால், யாருக்குத்தான் கலக்கம் வராது. மன்னாதி மன்னராயினும், மாவீரர்கள் வரிசையிலே நிற்பவர்களானாலும், சொல்லைச் சட்டமாக்கும் சுந்தரவித்தை கற்றோரானாலும், வில்லை எடுத்தால் 'போதும் இத்தொல்லை' யென விரோதிகள் புறமுதுகிட்டோடச் செய்யும் புகழேந்தியவனானாலும், கூட இருப்பவரே குடிகேடர்களாக மாறினாரென்றால், கொதிக்காமலிருக்குமோ, இரத்தம்? அதிலும், காந்தாராவ்—சாதாரணமானவனல்ல; ஐதர்அலியின், அந்தரங்கத் தோழன்—நேற்றுவரையிலே, நெஞ்சாரப் பங்குகொண்டு, எல்லாவித ஆலோசனைகளையும் தந்தவன். அத்தகையவன், வாளேந்தி, 'வாடா, பயலே!' என்று அழைக்கிறான் — போர் முழக்கம் செய்கிறான்! சித்தம் கலங்காதா, எவருக்கும்? அத்தர் என எண்ணியது ஆவிபோக்கும் நஞ்சாக வன்றோ, மாறி நிற்கிறது! ஐதர், திகைத்தான்—திகைப்பு அதிகமாகும் விதத்தில், செய்திகள் வந்துகொண்டேயிருந்தன. காந்தாராவின் படைகள், வெற்றி பெறுகின்றன— ஐதரின் படைகள், தோல்வி அடைகின்றன. அதோ, நெருங்கிவிட்டான்! ''வீரா! விரோதியைச் சமாளிக்க முடியவில்லை, எம்மால்!!'' என்று வீரர்கள் வந்து சேதிசொல்லிக்கொண்டேயிருக்கின்றனர். எப்படித் தாங்கமுடியும், ஐதரால்?

''ஏது, அவனுக்கு இவ்வளவு படைகள்?''

''மைசூர் அரசர் உதவியது. அவருக்காகத்தானே போர் செய்கிறான், அவன்''

''நான் மைசூர் அரசனுக்கு என்ன குற்றம் செய்தேனும்''

''அவனுக்கு நண்பராகவும் நல்ல வீரனாகவும் இருந்தீர். முதலமைச்சர் நஞ்சராஜை பதவியிலிருந்து விரட்டி, மன்னனையும் அவனது அன்னையையும் அந்தக் கொடுங்கோலனின் அதிகாரப் பிடியிலிருந்து விடுவித்தீர்......''

''இவைகள் குற்றமா?''

''இவைகள்தான் குற்றம்''

''இதற்கு இவர் ஏன் என்னுடன் சண்டை தொடுக்கிறான்?''

''யார்?''

''இந்த காந்தா ராவ்!''

*

''இந்த, காந்தாராவ்—ஏன் வலிய வந்து உதவிபுரிகிறேன் என்கிறான்?'' இதே சந்தேகம், மைசூர் மன்னன் சிக்க கிருஷ்ண ராஜனுக்கும் அவனது அன்னைக்கும் ஏற்படாமலில்லை. ஒருவேளை, ஐதரின் சூழ்ச்சியாக இருக்குமோ? அவனைப் பற்றி நாம் எவ்விதக் கருத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை அறிய இவனை அனுப்பி, 'ஆழம்' பார்க்கிறானோ—என்றெல்லாம் சந்தேகப்பட்டனர், காந்தாராவ் அவர்களை அணுகி, தன்னுடைய ஆசையைத் தெரிவித்தபோது.

''விளக்கு எரிகிறது மன்னவா; கண் கூசுமளவுக்கு ஜெகஜோதியாகக்கூட எரிகிறது; அதைப் புகழ்கிறோம் நாம். அப்படி எரிவதற்குக் காரணம் என்ன என்பதை எண்ணிப் பார்த்திடவேண்டாமோ? அரசே, எண்ணெயும் திரியும் இல்லாவிடில் எரியுமோ அந்த விளக்கு?''

''உதாரணம் சரி; காந்தாராவ். அது உள்ளடக்கி வைத்திருக்கும் பொருள் என்ன?''

''ஏழைப் பிராமணன் நான். என் வார்த்தையை ஏற்பீர்களோ, என்னவோ. அதிலும், ஐதர்அலி உங்கள் அபிமானத்துக்குரியவர் — முதலமைச்சர் நஞ்சராஜை விரட்டிவிட்டு, அந்த இடத்தை அலங்கரிக்கும் பாக்யம் பெற்றவர். 'கப்பங் கட்டுக' எனக் கோரி படையெடுத்து வந்த மராட்டியர்களை வென்று, அவர்களின் கர்வத்தை அடக்கி, உங்களை அண்மையில்தான் காப்பாற்றியிருக்கிறார்''

''அதனால் என்ன, உண்மைக்கு என்றும் எம்மிடம் மதிப்புண்டு''

''ஜொலிக்கும் வைரத்தை யார் கண்டுபிடிக்கிறார்கள்? கண்முன் கிடக்கும் கூழாங்கல்லைத்தான் கோபுரத்தின்மீதேற்றி அழகு பார்க்கிறார்கள்''

''ஏனிப்படி பெருமூச்சால் பேசுகிறீர்? விஷயத்தைச் சொல்லும்''

''சொல்லத்தானே மன்னவா, அந்தத் 'துலுக்கனை'விட்டு உங்களிடம் வந்திருக்கிறேன். முதல் மந்திரியாக இத்தனை வருடமும் இருந்த நஞ்சராஜை, ஏன் பதவியிலிருந்து விரட்டினீர்கள்?''

''நஞ்சராஜ் பெயருக்கேற்ப நஞ்சு ராஜாக மாறிவிட்டான். அதனால் நீக்கினேன். ஏன் அது தவறு என்பது உம் கருத்தோ?''

''அல்ல, அல்ல; தவறு செய்பவர்கள் அரச மன்றத்துக்கே கூடாது. நான் அதைக் கூற வரவில்லை. அவன் தான் தேள்—அதற்காக விலக்கினீர்கள். ரொம்ப சரி, தேளை எடுத்துவிட்டு அந்த இடத்தில் வாளுக்கு இடம் தரலாமோ?''

''ஐதர்அலி, அவனினும் கொடியவனா?''

''தங்களுக்குஎப்படித்தெரியமுடியும்? மன்னா! இத்தனை வருடமும் பழகியும், என்னாலேயே இப்பொழுதுதானே அறிந்துகொள்ள முடிந்தது, அவன் யாரென்று? எனக்கே இப்படியென்றால் உங்களுக்கு எப்படித் தெரியமுடியும்? மன்னா! ஒரு கேள்வி, கேட்கிறேன்—தாங்கள் யார்? தங்களுடைய பரம்பரை எத்தகையது? அவன் யார்! அவன் வணங்கும் தெய்வம் எது!! அரசே—திருவரங்கப்பெருமானின் திருவடிகளைத் தொழும், தாங்கள் எங்கே? 'மக்கா'விட்டு'மதினா' ஓடிய அந்த முகம்மது நபியின் மார்க்கத்தவன் எங்கே? நரியின் செயல் பிடிக்கவில்லையென்று புலியைத்துணைக்கழைப்பரோ, நல்லறிவுடையோர்!''

''காந்தாராவ்! நீரா, இவ்வண்ணம் பேசுகிறீர்?''

நீரா, இவ்வண்ணம் பேசுகிறீர்!—அரசன் ஆச்சரியத்தோடு கேட்டான். அரசனென்ன, இந்தச்செய்திகேள்விப்படும் எவரும், ஆச்சரியப்பட்டேயிருப்பர்! ஏனெனில், காந்தாராவ்—ஐதர் கண்டெடுத்த கல்! அதனை, மாணிக்கக் கல்லாக்கி, தன்னருகிலிருக்கச்செய்து புகழையும் உண்டாக்கித் தந்தான், ஐதர்!!

ஒருமுறை-ஐதர், படையிலே சேர்ந்த நேரம்—மைசூர் பட்டாளம், ஐதராபாத் அரசுக்குத் துணை சென்றது. ஐதராபாத்தில், அப்போது, யார்பட்டத்துக்கு வருவது? என்பது பற்றி பலத்த போட்டி. நாசர் ஜங் என்பான், பட்டம் சூடிக்கொண்டான்! எதிரியோ, அப்போது இந்த மண்ணில் ஏற்றம் பெற்றுக் கொண்டிருந்த பிரெஞ்சுக்காரர்களின் தயவை நாடினான். நாசர்ஜங்குக்கு, ஐதரின் படைகள் துணைசென்றன! பிரெஞ்சுக்காரர்கள் தந்திரத்தால் நாசர்ஜங்கைவென்றனர்—கொன்றும் போட்டனர். ஐதராபாத், குழம்பும் குட்டையாயிற்று! படையுடன் சென்ற ஐதர், வெறுங்கையுடன் திரும்பும் மனமில்லாதவனாய், நாசர்ஜங்கின்பொக்கிஷத்தைக் கொள்ளையிட்டு, நிதி பல பெற்று, வீரர்கள் பலரையும் தன்வசம் சேர்த்துக் கொண்டு திரும்பினான்! அப்போது, கிடைத்தவன் தான், காந்தாராவ்!! பஞ்சையாக,பராரிபோலத்தென்பட்ட காந்தாராவையும் தன் கூட அழைத்து வந்து, அரிய நிலைக்கு உயர்த்தினான், ஐதர். அந்தக் காந்தாராவ்தான், இன்று இப்படிப் பேசுகிறான்! 'எடுத்தேன்—எறிந்தேன்' என்று கூறுகிறான்!! 'ஐதர் எனும் விளக்குஎரிய எண்ணெயும் திரியும் நானல்லவோ?''; என்று கூறுகிறான். ஒரு போது வைதீகக்கோலத்துடன் இருந்தவன்! அரசமன்றத்துக்குநுழையும் அருகதை சிறிதுமற்றவன்!! பாக்யம் பெற்றது, ஐதரால்—அந்த எஜமானனைக் கவிழ்க்கிறேன், என்கிறான்.

காந்தாராவ்! நீரா! இப்படிச் சொல்லுகிறீர்? நீரா, ஐதர் அலியைப்பற்றி இப்படிச் சொல்லுகிறீர்? நம்பமுடியவில்லையே எங்களால்......''

''நம்பத்தான் முடியாது, மன்னவா—யாருமே நம்பத்தான்மாட்டார்கள். பூவோடு சேர்ந்த நாரும் மணம்பெறும் என்பார்கள். இந்தப் பூதேவனும், ஐதரோடு சேர்ந்து, அவன் புத்தியில் கலந்திருப்பான் என்றுதான் எண்ணுவார்கள். ஐதர் பூவுமல்ல; இந்த ஐயன் நாருமல்ல. ஏதோ காலவித்யாசம்—ருக்குக்கும் யஜுருக்கும் வித்யாசம் தெரியாத நீசனுடன் தொடர்பு கொள்ள நேரிட்டுவிட்டது. முன்வினைப்பயன்போலும். வேதமோதும் நான், அந்த வேதனைக்காரனுடன் நண்பனாக இருக்க நேரிட்டுவிட்டது. சந்தர்ப்பவசத்தால் சாக்கடையில் புரள்வதுடன் தொடர்புகொள்ள நேரிட்டுவிட்டாலும், காராம்பசு, எப்போதும் காராம்பசுதானே! ஏதோ, காலக்கோளாறால்—அவனுடன் இதுவரையில் இருந்தேன். சண்டை போடுகிறானே — தங்கள் அரசுக்குப் பக்கபலமாக இருக்கிறானே—தாங்கள் இந்துமதக் காவலரன்றோ-தங்களுக்கு ஒத்தாசைபுரியும் அவனுக்கு, நமது சக்தியானுசாரம் உதவிபுரிந்தால், ஒரு விதத்தில் அதுவும் உங்களுக்குச் செய்யப்படும் உதவிதானே என்று எண்ணினேன். என் எண்ணத்தில், மண்ணைப் போட்டுவிட்டீர்கள் — மன்னவா-மண்ணைப் போட்டுவிட்டீர்கள்''

''ஏன், இப்போதும், ஐதர் கூட இருந்து பணிபுரிவதில் எவ்வித ஆட்சேபணையும் சொல்லமாட்டேன் நான்''

''நீங்கள் சொல்லமாட்டீர்கள்' ஆனால், என் இருதயம் ஒப்புக்கொள்ள வேண்டுமே''

''இருதயத்துக்கு என்ன வந்தது இப்போது?''

''மன்னா, மனதைத் திறந்தே பேசுகிறேன்—அன்ன விசாரம், துணிவிசாரம் ஆகியவைகளை எண்ணி, ஏதோ கொஞ்சக்காலம் ஆச்சாரநேமநிஷ்டைகளை ஒதுக்கிவைத்தாலும், அவைகளை அடியோடு மறந்திடும் மரபென்றோ எண்ணினீர் என்னை; கேவலம் இந்த வயிற்றைக் கழுவுவதற்காக பிழைப்பின் நிமித்தம் இப்படி அப்படியிருப்பதால்—எல்லாக் காரியத்துக்கும் இன்னொரு மிலேச்சனுக்குத் துணை போவேனா நான்? ஏதோ, பெரிய வீரனாயிருக்கிறானே என்று இருந்தேன்; இப்போது அவனை வீரன் என்ற இடத்திலிருந்தும், மந்திரி பீடத்துக்கு உயர்த்தியிருக்கின்றீர்கள். வீரன்! மந்திரி!! வித்யாசம் உடையளவோடு இல்லை—மன்னா! அதிகாரத்திலுமிருக்கிறது. ஆள்பவர், இந்து—அவரை ஆட்டிவைப்பவன், முஸ்லீம், விபரீதம் என்னென்ன வருமோ. யார் கண்டார்கள்? ஐதர், சாதாரண தளபதியாயிருக்கட்டும்; தங்களுக்கே யோசனை கூறும் அளவுக்கு அவன் உயர்வது, ஆபத்து, ஆபத்து! நாட்டுக்கும் மதத்துக்கும்''

''எம்மதமும சம்மதம் என்று சொல்வதாலன்றோ, அவனை, மக்கள் எல்லாம் போற்றுகின்றனர்''

''அப்படிச் சொல்வதுதான்வேந்தே ஆபத்து. காற்றடிக்கும் திக்கில் சுழலும் காற்றாடியை, எப்போதும் நம்பக்கூடாது; அதிலும், ஒரு அரசர் நம்பவே கூடாது''

''புரிந்துகொண்டேன்; உம்மையும் நீர் கூறுவதையும் புரிந்துகொண்டேன்''

''அது போதாது, அரசே! வலையை எலி அறுக்குமுன்னரே பொறிக்குள்ளே போட்டுப் பூட்டவேண்டும்...',

''அதற்கேற்ற 'பொறிகள்' இல்லையே''

''ஏனில்லை?''

''போரில் புயலாயிற்றே அவன்''

''நாம் ஒன்றும் புழுதிமேடு அல்லவே''

''என்ன செய்யச் சொல்கிறீர்?''

''அப்படிக் கேளுங்கள் — இன்று முதல், இந்த காந்தாராவ், உங்களுடைய நன்மைக்காகவே, பாடுபடுவான். மதம் செழிக்க, நமது அரசு வாழப் பாடுபடுவான். எந்தக் காரியம் செய்ய வேண்டுமானாலும் இப்போது கேட்டீர்களே அதைப்போல, ''என்ன செய்யச்சொல்லுகிறீர்?, என்று என்னைக் கேளுங்கள்.''

*

இந்தச் சதியை எப்படி அறிவான். ஐதர். அதனால் விழித்தான் — தவித்தான். மைசூர் படையே தன் படையுடன் மோதுவது கண்ணெதிரே தெரிகிறது. அதோடு, தான் வெற்றிகண்ட மராட்டியரையும் நாடி, காந்தாராவ் அவர்களது படையையும் திரட்டி வந்திருந்தான். வீர மராட்டியர், இந்துக்கள். காந்தாராவ் இந்துமதக் காவலன். ஐதரோ, வேறு மதம். சாதாரண 'பக்கிரி'யாக இல்லாமல், வீரனாக இருக்கிறான்-வேந்தனே கண்டு மிரளுமளவுக்குவேறு வளர்ந்துவிட்டான். போர், கடுமையாக நடந்தது. ஐதர், தோற்றான். நஞ்சன்கூடு எனுமிடத்தில் நாடே பயந்த ஐதர், தோல்வியைச் சந்தித்தான்.

இந்த நிகழ்ச்சியை, அதோ, 'இந்து தேச சரித்திரம்' படிக்கும் மாணவனைக் கேளுங்கள் — ''ஐதருக்கும், மைசூர் படைகளுக்கும் நஞ்சன்கூடு என்னும் இடத்தில் சண்டை நடந்தது. சண்டையில், ஐதர் தோற்றான். தோல்வி யடைந்தது மட்டுமின்றி காந்தாராவ் என்பவன் காலில் வீழ்ந்தும் உயிர்ப் பிச்சை வேண்டினான்'' என்று சுருக்கமாகச் சொல்லுவான் அந்த மாணவன்.

போதிக்கும் ஆசிரியரும், அந்தளவோடு நிறுத்திவிட்டு — பிறகு, ஐதர் வளர்ந்து, மைசூர் அரசுக்கே தலைவனாக வந்தது, அவன் மகன் திப்புசுல்தானின் தீரம், அப்போது பிரெஞ்சுக்காரர்களும் இங்கிலீஷ்காரர்களும் மோதிக்கொண்டது முதலிய விவரங்களைச் சொல்ல ஆரம்பிப்பார்.

ஆனால், ஐதர், இந்தத் தோல்விக்குப் பிறகுதான், அடிபட்ட புலியானான். தோற்றதும், காந்தாராவிடம் சென்று ஏசவில்லை—குமுறவில்லை. நின்றான். காந்தாராவ், அவனைத் திரும்பியும் பார்க்கவில்லை. இறுமாப்போடு, அமர்ந்திருந்தான்.

''ஐதர் வந்திருக்கிறேன், காதாந்ராவ்......''

''தெரிகிறது! என்னிடம் தோற்ற ஐதர், உயிர்ப்பிச்சைநாடிவந்திருப்பது தெரிகிறது......''

''உண்மைதான்! நீயும் நானும் எவ்வளவோ பழகினோம் என்பதால் தான் உன்னிடம் வந்திருக்கிறேன்''

''ஐதரின் எடுபிடி காந்தாராவ் இறந்து எவ்வளவோ, நாளாகி விட்டது! இங்கேயிருப்பது மைசூர் மன்னனின் ஆலோசகரான காந்தாராவ்!!''

''நானும் அவரைத்தான் பார்க்க வந்திருக்கிறேன். தக்காணத்திலே தருப்பைப்புல்லுடன் அலைந்துதிரிந்த காந்தாராவைச் சந்திக்கஅல்ல.''

''தோற்றும், உன் திமிர் அடங்கவில்லை!''

''வென்ற இறுமாப்பு உம்மை இப்படிப் பேசச் சொல்லுகிறது!''

''என்ன?''

''கோபம் வேண்டாம் காந்தாராவ்! உம்மிடம், உயிர்ப்பிச்சை கேட்கவே, வந்திருக்கிறேன்—திமிரோடு, அல்ல! —தெண்டனிட்டு வேண்டுமானாலும் கேட்கத் தயாராயிருக்கிறேன். ஒரு போது, நீர் கீழும்-நான் ஆசனத்திலுமிருந்தேன். அந்தக்காலம்அல்லஇது, சந்தர்ப்பங்கள், சகடக்கால்களைப் போல—சிலசமயம் சந்தனக் காற்றையும் கொண்டுவரும்—வேறுசில நேரம் சாக்கடைச் சேற்றையும் அள்ளிவீசும். —இதை, நன்றாக அறிவேன். நேற்று நான் மாவீரன்! அதற்கு முன்பு—சாதாரண வீரன்தான்!! இடையில் பெற்ற புகழையும் பெருமையையும், கனவுபோல மறந்துவிடத் தயாராகஇருக்கிறேன். பழையவாழ்வு கிடைத்தால் போதும். உம்மைப்பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். என் மனதைக் குத்தாதீர்! உயிர்ப்பிச்சை—ஒரு சிறு பதவி. அதுபோதும்......''

ஐதர், இவ்வளவு பணிவோடு பேசியது, காந்தாராவுக்கு ஆச்சரியத்தைத் தந்தது!

(16-ம் பக்கம் பார்க்க)

ஒரு சித்திரம்

கடிகாரம்

2

[அண்ணல்]

[சென்ற வாரத் தொடர்ச்சி]

அருகில் சென்ற குமாஸ்தா, மேஜை மீது கிடந்த தாள்களை எடுத்தான்—எல்லோரிடமும் தந்தான். மருதவாணர் கடிகாரத்தைப்பற்றியும், 'கடிகாரம் என்னுடையது!', என்று எழுதியிருப்பதையும் கண்ட எல்லோருக்கும், ஒன்றும் புரியவில்லை.

இத்தனைச் சந்தடிகளுக்கும் எழுந்திராமலிருந்தார், மாஜிஸ்திரேட்! ஐயம் அதிகமாயிற்று, எல்லோருக்கும்; அவரது 'பியூன்' அருகில் சென்று மூக்கின்மேல் விரலை வைத்துப் பார்த்து, 'மூச்சு இருக்கிறது', என்று ஜாடை காட்டினான். டாக்டரை அழைக்க ஆள் சென்றது.

வழக்கு, 'ஆரம்பக் கட்டத்தோடு' அன்று முடிந்தது. வரதனையும் வள்ளியையும்'ரிமாண்டு'க்கு அனுப்பினர். 'யுவர் ஆனரை', வண்டி கொண்டு வந்து வீட்டுக்குக் கொண்டு சென்றனர்.

ஊரெங்கும், இதே பேச்சுத்தான். மாஜிஸ்திரேட் எழுதிவைத்திருந்த வரிகளை, 'பலே செய்தி', பத்திரிகை, விதவிதமான தலைப்புகளோடு பிரசுரித்து, 'கார்ட்டூனும்' தீட்டியிருந்தது.

நானோ, திகைத்தேன்; அந்தக் கடிகாரம் எவ்வளவு பெரிய பிரச்னையாகிவிட்டது. வரதன் இருந்தாலும் ஏதாவது விபரம் கேட்கலாம். அவனோ, சிறையில்.

"கடிகாரம், என் வள்ளியுடையது!," என்று கோர்ட்டில் அவன் கூறியது, என் காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

"ஆமாங்க! என்னுடையதுதான். ஏனோ, இவரை இழுத்து வந்து அதோடு என்னையும் இந்தப் போலீஸ்காரங்க, சந்திசிரிக்க வைக்கிறாங்களோ, தெரியலே", என்று, வள்ளி முணகிக் கொண்டிருந்ததையும், நான் மறந்துவிடவில்லை.

கடிகாரமோ, தன்னுடையது!—என்று, எழுதிவைத்தபடியே மாஜிஸ்திரேட், மயக்கமடைந்து படுக்கையில் கிடக்கிறார்.

வள்ளியும் வரதனும் நிச்சயம் அவ்வளவு விலையுயர்ந்த கடிகாரத்தை விலைக்கு வாங்கியிருக்க முடியாது; போலீசார் சந்தேகப்பட்டு குற்றம் சாட்டியதில் தவறேதும் இல்லை.

ஆனால், மாஜிஸ்திரேட்டோ—கடிகாரம் தன்னுடையது என்று 'கிறுக்கி' வைத்தபடியே, மயக்கமடைந்திருக்கிறார். உண்மையில் கடிகாரம் அவருடையதாகவேயிருக்கலாம்—எப்படியோ வள்ளியின் கைக்கு வந்திருக்கலாம்—அதை அவளுக்குத் தெரியாமல் எடுத்து வந்து என்னிடம் 'அடகு' வைக்கவந்திருக்கலாம், வரதன். அப்படியானால், மாஜிஸ்திரேட் வெளிப்படையாகக் கோர்ட்டில் கூறியிருக்கலாமே; ஏன், ஏதோ கிறுக்கவேண்டும்—மயக்கமடைந்து சாயவேண்டும்.

"அவர், இப்படித்தான் சார்! ஏதாவது 'திடீர்' என்று செய்தி கேள்விப்பட்டாலே, இப்படி அதிர்ச்சி அடைவதுண்டு, சார். இருதயம், ரொம்ப பலவீனம். டாக்டரிடம் அடிக்கடி இன்னும் மருந்து சாப்பிட்டு வருகிறார். அது தான், காரணமாயிருக்கும். தன்னுடைய கடிகாரம் கிடைத்து விட்டது என்கிற நினைப்பே, அவருக்கு அதிர்ச்சியைத் தந்திருக்கும்", என்கிறான்,' கோர்ட்சேவகன்—அவனைச் சந்தித்து, நான் விசாரித்த போது.

அப்படியானால், "**கடிகாரத்துக்கு சாவி கொடுத்தால், ஓடும், ஆனால் உலகில் வாழ முடியாமல் திண்டாடும் திக்கற்றோரின் வாழ்க்கைக் கடிகாரத்தை ஓடச்செய்ய, சாவி ஏது? சிந்தை குழம்புகிறேன். பணமா!—ஓரளவு ஒப்புக் கொள்ளுகிறேன். அந்தச் சாவி இல்லாததால் தானே, வரதன் திருடனானான்—வள்ளி, சந்திக்கு வந்தாள். கடிகாரத்தையும் வள்ளியையும் திரும்பத்திரும்பப் பார்க்கிறேன்**", என்றெல்லாம் ஏன் அவர் எழுத வேண்டும்? அதிலும், கடமையைச் சரிவர நிறைவேற்றும் உத்தமர்—என்று பெயரெடுத்தவர்!! வழக்கு நடைபெற்ற போது, மனம் போன போக்கில், இப்படியெல்லாம் எழுதக் காரணம் என்ன?

மனிதர்களின் மனதை 'அலாவுதினின் தீபத்து'க்கு ஒப்பிட்டு, ஒருநாவலாசிரியர், எழுதியிருந்தது எனக்குக் கவனத்துக்கு வந்தது! அலாவுதீன் வைத்திருந்த விளக்கைக் கொஞ்சம் தடவிக்கொடுத்தால் போதுமாம்!! பூதம் ஒன்று வந்து நிற்குமாம்—அதைப் போல ஆயிற்று, என்னுடைய நிலை. வீட்டுக்கு வந்தாலும், கடையில் போய் உட்கார்ந்தாலும், மணிக் கூண்டு கடிகாரத்தைப் பார்த்தாலும், கடையிலிருக்கும் கடிகாரம் மணியடித்தாலும், கைக்கெடிகாரம் கண்ணில் தென்பட்டாலும்—வள்ளி. வரதன் மருதவாணர் ஆகியோரின் நினைவு, பேருருவெடுத்து என்னைக் குழம்பச் செய்தது! இதனால், என் வாடிக்கைக்காரர்கள் யார் வந்தாலும் அவர்களுடன் இது பற்றி சிறிதுநேரம் பேசி, ஒவ்வொருவரும் ஏதாவது கூறுகின்றனரா—என்று அறிய முயற்சித்தேன். அன்பர் **சொல்லுழவன்**, எழுத்தாளர்—அதனால் அடிக்கடி என்னை 'நாடி' வருவார். எதற்கு? இருப்பதைவைத்து ஏதாவது பெற்றுச் செல்லத்தான்!! அவரிடம் சொன்னேன் — சிறிது நேரம் யோசித்தார் — 'இருங்கள், வருகிறேன்!', என்று வீட்டுக்குப் போனார்—தான் எழுதிய ஒரு நாவலைக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்து, 'இதைப் படியுங்கள். ஒரு வேளை, உங்கள் சந்தேகம் நிவர்த்தியானாலும் ஆகலாம்', என்று கொடுத்துப் போனார். இரவு முழுமையும் கண் விழித்துப் படித்தேன்! கதைச் சுருக்கம் இது—கடிகாரத்தின் கதையை ஆரம்பித்து, சொல்லுழவரின் நாவலைச் சொல்லுகிறேனே, என்று கோபப்படாதீர்கள்—இரண்டுக்கும் தொடர்பிருக்கலாமோ என்று என்னைப் போல, உங்களுக்கும் சந்தேகம் ஏற்படக் கூடும்—அதனால், கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள்.

"அவள் ஒரு அழகுச்சிட்டு; யாரும் தொட்டறியாத மொட்டு; அந்த வீட்டு வாலிபன், அவளைக் காதலித்தான். வாலிபனோ; பணக்காரன். வனிதையோ, மாட்டுக் கொட்டிலில் சாணம் எடுத்துச் சென்று வறட்டி தட்டிவிற்கும் ஏழைக் கிழவியின் மகள். ஒரு நாள், வழக்கம்போல் சாணம் எடுக்கவந்த

போது, அவளை அவன் சந்தித்தான். காதல், அரும்பி—மலர்ந்து—கனிந்து, எல்லாம் நடந்துவிட்டது. இந்நிலையில்; அவனுக்குத் திருமணம் செய்ய முயன்றனர், பெற்றோர். வீட்டுக்குப் பயந்த பிள்ளை. என்ன செய்வான்? காதல், 'காதலியைக் கைப்பிடி;', என்று சொல்கிறது. கடமையும் சமூகமுமோ, உறுமுமே என்று உள்ளம் கூறுகிறது. கடைசியில்— எல்லோரும் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்களே, இந்தக் காலத்தில்—அந்தச் சூழ்நிலை, அவனை மடக்கிப்போட்டு விட்டது. திருமணம் செய்து கொண்டான். தேம்பிய காதலியை விட்டு விட்டான். அவளோ, அன்பு வளர்ந்தபோது அவன் கொடுத்துச் சென்ற ஒரு சிறு மோதிரத்தை வைத்துக் கொண்டே அதைப் பார்ப்பதும் காதலனை நினைப்பதும் கண்ணீர் சிந்துவதுமாகக் காலம் தள்ளினாள். காலப் புறா, பறந்தது; கரு வளர்ந்தது. ஊரை விட்டு ஓடினாள்—அலைந்தாள்— சமூகம் ஏசிற்று. சதிகாரியானாள்; விபசாரியானாள்; எத்தனையோ துன்ப அலைகள்—என்றாலும் அவள், காதலன் தந்த மோதிரத்தை விற்கவில்லை. காலப்புறா மீண்டும் பறந்தது. (ஆசிரியர், நடை இது;) கிழவியானாள். அவளுக்கொரு மகன்—காதலன் தந்த பரிசு. அவன், கொஞ்சம் துஷ்டன். காசு தேவைப்படவே, அந்த மோதிரத்தைக் கொண்டுபோய், கடையில் விற்கப் போனான். ஒரு சமயம் அவனது தாயின் காதலனாகயிருந்தவரின், கடை அது. கொடுத்தான்; அவன் பிறக்கக் காரணமாயிருந்தவர் பார்த்தார்; 'ஏது'...என்று கேட்டார். அவன் விபரம் சொன்னான். அவருக்கு பழைய நினைவுகள் 'சலனப்படம் மாதிரி ஓடின.' (இதுவும் ஆசிரியர் நடையே!) மோதிரத்தோடு, பையனை அழைத்துக் கொண்டு, அவள் வீடு தேடி சென்றார். வீட்டில், கிழவரின் 'காதலி', இருந்தாள்— உயிரோடு, அல்ல; பிணமாக!! மோதிரம் களவு போயிற்று—என்று தெரிந்ததும், அந்தச் சோகம் தாங்காமல், அந்த 'அன்பின் சின்னம்' உயிரை இழந்தது. அந்தஸ்தின் சின்னமான அவர், நின்றார், மரமாக.", என்று முடித்திருந்தார், சொல்லுழவர்.

இதைப் படித்து முடித்ததும், "இந்தக் கதையைப் போலத்தானிருக்குமோ கடிகார விஷயமும்?", என்று எண்ணலானேன். காதலர்—காதலி—மோதிரம், மருதவாணர்—வள்ளி—கடிகாரம் என்று ஒப்பிடலாயிற்று உள்ளம். 'மருதவாணரா இப்படிச் செய்திருப்பார்?'—'கலியாணமே செய்து கொள்ளவில்லையாமே, அவர்!'—'இப்படி ஏதாவது நடந்திருக்குமோ அவரது வாழ்க்கையில்?', மருதவாணரைப் பற்றி இப்படி நினைக்க எனக்கு மனம் கூசாமலுமில்லை! சிறுவயது முதல் 'விவேகானந்தரை' லட்சியபுருஷராகக் கொண்டு, பிரம்மசரியத்தை அனுசரித்து, மேலைய நாடுகளுக்கெல்லாம் சென்று இந்து மதத்தின் பெருமைகளைப்பற்றி எடுத்துரைத்துவிட்டுவந்தவராம், அவர்! சொல்லக் கேட்டிருக்கிறேன். முகத்தைப் பார்த்தாலே போதும், மனிதர் எவ்வளவு உத்தமர் என்று விளங்கும்! சிறு துரும்பும் நோகச் செய்ய மாட்டாராம்—ஆபீஸ் பியூனைக்கூட, 'என்னடா!' என்று அழைத்தில்லையாம், அவர் — சம்பளத்தில் கோயில்களுக்கு காணிக்கை செலுத்துவது மட்டுமின்றி, மூன்று நான்கு ஏழைப் பிள்ளைகளின் படிப்புக்கும் உதவி வந்தாராம்! 'பசி' யென்று யார் போனாலும் 'இல்லை' யென்று சொல்லமாட்டாராம்! அப்படிப்பட்டவரா இத்தகைய 'சில்லரை' விஷயத்துக்கு சிந்தையைச் செலவிட்டு ஒரு பெண்ணின் வாழ்க்கையைக் கெடுத்திருப்பார்?

"ஏது அப்பா சில்லரை விஷயம்—இதுவா? பெண்களுக்காகப் பெரிய பெரிய கலவரங்கள் எல்லாம் நடப்பதாகப் பத்திரிகையில் படிக்கவில்லையோ, நீ! இகலோகம் வெறுத்து பரமனை நாடி பஜித்த முனிபுங்கவர்கள்கூட, அரம்பைக்கும் மேனகைக்கும் பல்லிளித்துக் கிடந்ததுண்டு. கேள்விப்பட்டதில்லையோ, நீ? காதலியின் கரங்களில் கட்டுண்டுகிடக்கும் 'வெறி'க்கு உலக உத்தமர் காந்தியாரே அடிபணிந்திருக்கிறாராம். வீட்டில் சாவு—அதுவும் பெற்றெடுத்த அன்னை பிணமாகிக் கிடக்கிறார்—அப்போதுகூட, கட்டில் மீதேறி, கஸ்தூரிபாயுடன் சிறிது நேரத்தைச் செலவிடத் தயங்கவில்லையாம். அந்த ஆசையிருக்கிறதே, அது சாதாரணமானதல்ல! அதனால்தான் 'வெறி' என்கிறோம், நாம்!! விளங்குகிறதா, உனக்கு? இது போன்ற விஷயங்களில், புழுவும்புலியாகும்—புல்லும், வாளாகும்—கிளியும், கழுகாகும், இந்த விஷயத்தில் ராஜாதிராஜர்களிலிருந்து, குதிரை தேய்க்கும் கோணங்கிவரையில், எல்லோரும் ஒரே ரகம் தான்! உத்தமர்—சத்யசந்தர் என்று போற்றப்படுவோர் கூட, இந்த விஷயத்தில், ஏதாவது ஒருவிதத்தில் தவறு செய்யாமலிருக்க மாட்டார்கள். இதைப் போய் சில்லரை விஷயம் என்று நினைக்கிறாயே! மருதவாணர், மகாகுணவான்தான். ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், உலகத்தில் தவறு செய்யாத மனிதர்களே—கிடையாது. தவறுகளை மென்மேலும் செய்து கொண்டேயிருப்போர்; ஒரு முறை செய்த தவறைப் பற்றி நினைத்து நினைத்து வருந்திக் கொண்டேயிருப்போர் — என்று, வேண்டுமானால், இரண்டுவிதம் உண்டே ஒழிய தவறு செய்யாதவர்களே கிடையாது! அதுவும் இந்த விஷயத்தில்!!", என்று, பேச்சாளர் **பெருமைத் தம்பி**, எனக்காக ஒரு சொற்பொழிவே ஆற்றினார். பெருமைத்தம்பியும், நான் சராசரி சந்திக்கும் 'பக்தர்'களில் ஒருவர்! கடிகாரச்சிக்கலைப்பற்றி, நான் பேசாத ஆளே தான் இல்லையே, இப்போது!!

அவர் கூறுவதிலும் உண்மை இல்லாமலில்லை. ஆனால், என் சந்தேகங்களை இந்தப் பதில் மட்டும் நிவர்த்தி செய்துவிடமுடியுமா? குப்பையைக் கிளறக் கிளற நாற்றம் அதிகமாவதுபோல், கடிகார சிக்கலை அவிழ்க்க, முயல முயல, ஆர்வமும் குழப்பமுமே அதிகமாயிற்று. ஒரு நாள், மாஜிஸ்திரேட் மருதவாணர் வீட்டுப் பக்கம் சென்றேன்—அவர் வீட்டு வேலைக்காரன், என் கடைக்கு வருபவர்களில் ஒருவன். வட்டிக் கடைக்கு வராத, ஏழைகளும், நடுத்தர வர்க்க மக்களும் தான் கிடையாதே!! அவனைக் கேட்டேன்; "எப்படியப்பா, இருக்கிறார், ஐயா." "அன்றையிலிருந்து பிதற்றியபடியே இருக்காருங்க; எப்பப் பார்த்தாலும், "மோசம்; ஈசுவர பக்தர்களா, அவர்கள்? என்னை ஏமாற்றி விட்டார்கள், ஏமாற்றப்பட்டேன் நான்." என்றே உளறிக் கொண்டிருக்கிறார். அது மட்டுமில்லீங்க; ஐயாவுக்கு ஆண்டவன் மீதும், அடியார்கள் மீதும் உள்ள பக்தி சிரத்தை தான் ஊரறிந்த விஷயமாச்சே. அதிலும் **சிங்காரமடத்து** ஜகத்குரு என்றால், தினசரி காலையில் ஒரு மணி நேரம் அந்தப் படத்துக்கு பூஜை செய்யாமல் வெளியே கிளம்பமாட்டார். ஆபீசுக்கு வரும்போது பட்டை பட்டையாகக் குழைத்துப் போட்

டிருப்பாரே இருநீர், அது, வாரா வாரம், இன்னமும் மடத்திலிருந்து 'பார்சல்' மூலம் வரத் தவறுவ தில்லை. ஐயாவுக்கு அந்த மடம் என்றால், விசேஷமான பக்தி யுண்டுங்க— இன்னைக்கு நேற்று அல்ல, சின்ன வயசிலேயிருந்தே! அந்தப் படத்தை—ஜகத்குருவின் படத்தை— நேற்று, மருந்துப் பாட்டிலை வீசி, சுக்கு சுக்காகி விட்டாருங்க. உடைக்கும்போது, "உருத்திராட்சப்பூனைகளடா, நீங்கள்; அசல் உருத்திராட்சப்பூனைகள்; கிராதகர்கள்; துரோகிகள்;" என்று அலறினாருங்க. பார்க்கவே, சங்கடமாயிருந்துச்சு. என்னமோ, போங்க. அருமையானவரு. அவருக்கு இப்படியெல்லாம் வரக் கூடாது", என்று சலித்துக் கொண்டான்.

புதிர்மேல் புதிராயிற்று, எனக்கு. மருதவாணர், கடவுள் துவேஷியாகக் காரணம் என்ன? சித்தசுவாதீனம் இழந்துவிட்டாரோ — என்று எண்ணினேன். "பைத்யம் பிடிப்பதற்குக் காரணம் மூளைக் குழப்பம். மூளைக் குழப்பத்துக்குக் காரணம், திடீர் அதிர்ச்சி" இப்படி, எங்கோ படித்தது ஞாபகத்துக்கு வந்தது. அந்த யோசனையுடன் கடைக்கு வந்தேன்.

அங்கே "உண்மையில் கடவுள் உண்டோ இல்லையோ" பைத்யம், என் வரவை எதிர்பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அவனைப் பார்த்ததும், கடிகாரத்தில் 'வினாடி'முள் ஓடுமே அது போல ஓடலாயிற்று உள்ளம். **"இவன், ஏன் அன்று கடிகாரத்தைக் கேட்டான். வாங்கிப்பார்த்ததும் பாய்ந்தான்?"** நல்ல சங்கடமடா இது! ஒரு சாதாரண கடிகாரம் என்ன பாடுபடுத்துகிறது!! கடையில் போய் அமர்ந்ததும், என்னை நோக்கி, எழுந்து வந்தான் பைத்தியம். பார்க்கவே பயங்கரமாயிருந்தது அவனை!! அழுது அழுது வீங்கிய அவனது கண்கள் கோவைப்பழம் போல் சிவந்துகிடந்தன. அடர்ந்து வளர்ந்த தாடியும் மீசையும் கண்ணீர்த் துளிகளைத் தாங்கிக் கொண்டிருந்தன. அவனைப் பார்த்தபடியிருந்த எனக்கு அன்று இதழில் 'கடிகாரம்' பற்றி படித்த செய்தியொன்று, கவனத்துக்கு வந்தது. அந்தச் செய்தி இது:

"ஸ்விஸ்ஜூவெல் பதித்த ஒரு லீவர் கடிகாரத் தயாரிப்பில் 2400 க்குக் குறையாத தனித் தனி வேலைகளைக் கவனித்தாக வேண்டியிருக்கிறது, என்று நிபுணர்கள் மதிப்பிட்டிருக்கிறார்கள். உறுப்புகள் ஒவ்வொன்றும் ஒரு அங்குலத்தில் 2,50,000 த்தில் ஒரு பங்கு அளவிற்குக்கூட பிசகாமல் சரியாக இருக்கிறதா என்று திறமை பெற்ற தொழில் நிபுணர்கள் பன்முறை சோதிக்கின்றனர்."

*

"ஒரு ஸ்விஸ் கடிகாரத்திலிருக்கும் பாலன்ஸ் சக்கரம் ஒரு மணி நேரத்தில் 19000 முறைகள் வீதம் நாள் ஒன்றுக்கு ஐந்து லட்சம் தடவைகள் சுழல்கின்றது. சிறந்த கடிகாரம் பராமரிக்கப்பட்டு வந்தால், 25 வருடம் ஓடிக் கொண்டிருக்கும். இந்த அவகாசத்தில் பாலன்ஸ் சக்கரம் மட்டில் சுமார் 90,000 மைல்கள் தூரம் பிரயாணம் செய்கிறது.

(வளரும்)

"கொய்த மலர்கள்"

சதியல்ல, அது!

கண்ணியம், கட்டுப்பாடு, அன்பு, அகிம்சை—நமது கழகத்தின் முத்தாரங்கள் — கழக வழி வருவோர் கடைப்பிடிக்கும் அருங்குணங்கள் என்பதை நடைமுறையிலே—நமது செயல்களிலே காட்டிவந்தோம். அழுக்குக் குணமும், இழுக்கு வழியில் செல்வோரும் நம்மை இழிவுபடுத்த எண்ணினர். கழகத்துக்கு மாசுகற்பித்து அவதூறு உண்டு பண்ண எத்தனித்தனர்—அந்த அக்கினிப் பரிட்சையிலும் நாம் வெற்றி கண்டுவிட்டோம். நீதிமன்றமே கூறிவிட்டது — தூத்துக்குடி சதிவழக்கின் தீர்ப்பு திட்டவட்டமாக சொல்லிவிட்டது.

"சதிசெய்தனர்"

"சர்க்கார் சொத்துக்கு சேதம் விளைவித்தனர்"

"கொலை செய்ய முயன்றனர்"

"கொள்ளையடித்தனர்"

—இப்படியெல்லாம் குற்றச்சாட்டுகளை சுமத்தி கடந்த ஒண்ணரை ஆண்டுகளாக நடைபெற்று வந்த வழக்கு கடந்த 27உடயோடு முடிந்துவிட்டது.

"புதுக்கிராமத்தில் நடந்த செயல்களுக்கும் தி. மு. க-வினருக்கும் சம்பந்தமில்லை—கொலை செய்ய, கொள்ளையடிக்க சதி நடக்கவில்லை" என்று தனது தீர்ப்பின் விபரத்தில் கூறியிருக்கிறார் நீதிபதி.

ரயிலை நிறுத்தியவர்கள்—அதற்குக் காரணமாக இருந்தவர்கள்—சட்ட விரோதமாக கூடியவர்கள் என்ற காரணங்களைக் காட்டி 25 தோழர்களை தண்டித்து இருக்கிறது சட்டம். அதையும் எதிர்த்து நாம் உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்திருக்கிறோம். அது பொறுத்திருந்து காணவேண்டிய தீர்ப்பு. இதற்கிடையில் கிடைத்த தீர்ப்புக்கு விமர்சனம் கூறாமல், ஆனால் வழக்கின் சாரத்தை நாம் ஒருமுறை கட்டுரைட்டம் செய்ய கடமைப்பட்டிருக்கிறோம்.

கடந்த ஆகஸ்டு 15-ல் நாடெங்கும் நடைபெற்ற ரயில் நிறுத்தப் போராட்டத்தில் தூத்துக்குடி தோழர்கள் மீது மட்டும் சதிக் குற்றம் (120B) சாட்டி 96 பேர் மீது வழக்கு தொடர்ந்தனர் போலீசார். வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுதே நாம் எடுத்துக் காட்டியிருக்கிறோம். இல்லாத ஒன்றை—நடக்காத ஒரு குற்றத்தை நடந்ததாக ஜோடித்து'சதி' வழக்கு தொடர்ந்திருக்கின்றனர் போலீசார்.—அதற்கு காரணம் "தூத்துக்குடி அரசியல்" தான் என்றோம்.

தீயவர்களுக்கு தூபதீபநைவேத்தியம்காட்டிபாராக்குகூறிக்கொண்டு ஆட்சியினர் காங்கிரசார் என்ற காரணத்தால், வாய்க்கும் கைக்கும் எட்டிய தூரத்தில் எவ்வளவு போக்கிரித்தனமும் செய்யமுடியுமோ, அத்தனையும் செய்பவர்கள் இன்றைய காங்கிரஸ் தலைவர்கள். அத்தகைய சமுதாய விரோதிகளின் அரவணைப்பில் ஆதரவின் உருவானது தான் "சதி வழக்கு".

இந்த உண்மையை போலீஸ் நிர்வாகத்தின் தோலைஉரித்துக்காட்டுவதுபோல பட்டவர்த்தனமாக நீதிமன்றத்திலே தனது வாதத்தில், ஸ்திரிகள் சார்பாக கேட்டார்.

"போலீஸ்காரர்கள் நடத்திய 'சதி'யால் தான் இந்த சதி வழக்கு,

தொடர்ப்பட்டிருக்குறது" என்று கூறினர்.

"துப்பாக்கிப் பிரயோகம் செய்ய உத்தரவு கொடுத்த ஜில்லா கலெக்டர்—துப்பாக்கிப் பிரயோகத்தின் போது ஸ்தலத்திலிருந்த டிப்டி கலெக்டர்—ஆகியோரை, இந்த வழக்குக்கு சர்க்கார் தரப்பு ஏன் சாட்சிகளாக கொண்டுவந்து நிறுத்தவில்லை?" என்றார் வழக்கறிஞர் தங்கசாமி.

ஆகஸ்டு 15-ல் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தை கண்டித்து ஆகஸ்டு 16-ல் சென்னை சட்டசபையில் கண்டனப் பிரேரணைகள் வந்தன—இதற்குப் பிறகுதான், நான்கு உயிர்களை குடித்து 22 பேர்களை படுகாயப் படுத்திய போலீஸ் வெறியாட்டத்தின் அக்ரமத்தை மூடி மறைக்கத் தான்—சர்க்காருடைய கண்களுக்கு திரைபோட்டுக் காட்டத்தான் இப்படி ஒரு பெரிய வழக்கை ஜோடித்து காட்டவேண்டிய நிலை போலீசுக்கு ஏற்பட்டது" என்றார் தங்கசாமி.

ஆம் — இந்த மறுக்கமுடியாத வாதங்களால் தான் பொய்யர்கள் ஜோடித்த வழக்கு பொய்க்கால் குதிரைபோல சரிந்துவிட்டது.

நிரபராதிகளை நீண்ட நாட்களாக ஜாமீனில்கூட விடாமல் வாட்டி வதைத்தோம் என்ற அற்பமகிழ்ச்சியோல் சர்க்கார்தரப்பு திருப்தியடைந்துகொள்ளட்டும்.

தி. மு. க.வினர்—பலாத்காரவாதிகள்; அதோ பார், புதுக்கிராம நிகழ்ச்சியை என்று எழுதியும் பேசியும் தங்கள் ஆசையைத் தீர்த்துவந்த எத்தர்களின் நாற்ற வாய்கள், இனிமேல் நம்மையறியாமல் திறவா.

கழகத்தின் நடவடிக்கைகளில் சந்தேகம்கொண்டு கவனித்துவந்த காமராஜர் சர்க்கார் — சட்டபூர்வமான பரிசீலனையில் நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் தீர்ப்புகண்டு அவர்களது 'கலவரப்போக்கை' மாற்றிக்கொள்ளட்டும். அதே நேரத்தில் 'உள்ளூர் சங்கதி'கள் காரணமாக ஒரு பெரிய இயக்கத்தின்மீது பழி சுமத்தி—வழக்கு தொடர்ந்து வம்பு புரியும் கீழ்த்தரப்போக்கை — ஜன விரோதச் செயல்களை, அதிகாரம் கையிலிருக்கிற காரணங்களால் செய்யும் அடக்குமுறை தர்பார்களை ஒழித்துக் கட்டி ஒழுங்கான பாதை காட்டட்டும்.

கடைசியாக இன்னும் நாம் தெளிவாகக் கூறிவிடுவோம். தி. மு. க. சதிபுரியும் கூடாரமல்ல; கண்ணாடி வீட்டிற்குள்ளிருந்து காரியமாற்றுகிறது கழகம்—அதனால் அடுத்த வீடுமீது கல்லெறியாது. அதே நேரத்தில் அடுத்த வீட்டுக்காரர்களும் கழக வீட்டில் நடக்கும் காரியங்களை வெளியிலிருந்தே தெளிவாகப் பார்த்துக்கொள்ளலாம். அங்கு எதுவும் ஒளிவு மறைவு கிடையாது. அதனால் 'சதி' தேவையில்லை— அதைத்தான் நீதிமன்றமும் கூறியிருக்கிறது. "இளர்ச்சி"

சுவை சொட்டும் நூல்!

அற்புத ஆயுதம்

தீட்டியது:—

ப. உ. சண்முகம்

விலை 0-12-0

ராணி பதிப்பகம்

திருவண்ணாமலை.

அந்தோ, பிரகாசம்!

ஆந்திராவில் காங்கிரசின் ஆட்சியைக் காங்கிரசுக்காரர்களே கவிழ்த்துவிட்டு, காங்கிரஸ் ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டுவந்துவிட்டார்கள்......

காங்கிரசுக் கொள்கைக்கு, பிரகாசத்தின் பெயரால் இரண்டாவது படுதோல்வி ஏற்பட்டிருக்கிறது—ஆந்திராவில்.

ஆந்திர சிங்கம்—இந்திய தேசியத்தின் முதுபெரும் தனிமனிதர்—டி. பிரகாசம் மந்திரிசபை ஒரே வாக்கு வித்தியாசத்தில் தோல்வி கண்டுவிட்டது.

பிரகாசம் மந்திரிசபை எதற்காகத் தோற்றது என்ற கேள்விக்கு நேரான பதிலைக் காங்கிரசுக்காரர்கள் விளங்கிக்கொண்டால்; பிரகாசம் தோல்விக்காக ஒவ்வொரு காங்கிரசுக்காரரும் முக்காடு போட்டுக்கொண்டு மூலையில் ஒதுங்கித் தீரவேண்டும்!

பிரகாசம் மந்திரிசபை தோற்றது ஏன்?

ஒருவருக்குமே உதவாத தனிக்கொள்கை எதையேனும் அவருக்காக அமுல் செலுத்த முயன்றாரா? அன்றி காங்கிரசுக்கு எதிராக எதையேனும் செய்தாரா? ஒன்றுமே இல்லை,

காங்கிரஸ் கொள்கைக்கு—காந்தியின் கருத்துக்குத் தாய் நிலையான மதுவிலக்கை ஆதரித்தார்—கொஞ்சம் அழுத்தமாக அமுலும் செலுத்தினார்—விளைவு? தோல்வி!

இந்தத் தோல்வி யாருக்கு? பிரகாசத்திற்கா—காங்கிரசுக்கா?

காங்கிரசுக் கொள்கையைச் சட்டமாக்கி அமுல் செலுத்திய குற்றம் அமைச்சருடையதா? கட்சியினுடையதா?

காங்கிரசுக் கொள்கையைக் கடைப்பிடித்த பிரகாசம் காங்கிரசுக்காரரா? கடைப்பிடித்தவரைக் காலைவாரிவிட்ட காங்கிரசுப் பயில்வான்கள், காங்கிரசுக்காரர்களா?

காங்கிரசைவிட்டு விலகியவர்கள், காங்கிரசுக்காகவும், காங்கிரசுக்குள் இருப்பவர்கள் காங்கிரசுக்கு விரோதிகளாகவும் செயல்பட்டிருக்கிறார்கள் — பிரகாசம் தோல்வி விவகாரத்தில்!

முன்பு சென்னைப் பிரதமராக இருந்த பிரகாசம், காந்தியடிகளின் மிகவும் கெட்டியான மதுவிலக்குக் கொள்கையைக் கொண்டுவந்தார்—தோற்கடித்தனர்.

இன்று காங்கிரசுக் கொள்கையான மதுவிலக்கைப் பிடிவாதமாகக் கையாண்டார்—தோற்கடிக்கப்பட்டுவிட்டார்.

இரண்டு தோல்விக்கும் ஏற்பாடு செய்தவர்கள் காங்கிரசுக்காரர்கள் தான் என்பதே இதில் இதயத்தைப் பிசையும் விஷயம்!

காங்கிரசுக்காரர்களே இதில் முனைந்து, எதிர்க்கட்சியினருக்கு ஆக்கமளித்து, முடிவில் காங்கிரஸ் ஆட்சி கவிழ்ந்ததற்கு எதிர்க் கட்சியினரைக் காரணம் காட்ட வெட்கப்படவில்லை,

கடைசியில் இரண்டு காங்கிரசுக்காரர்கள் பிரகாசத்திற்கு எதிராக வாக்களித்தார்கள் என்பதற்காக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் போவதாய்வேறு விளம்பரம் செய்கிறார்கள். ஆனால் பிரகாசத்திற்கு ஆதரவாக வாக்களித்த காங்கிரஸ் மந்திரிகளில் யாராவது பிரகாசம் தோல்விக்கு வருந்தியதாகத் தெரியவில்லை. கட்சிக்கொள்கை தோல்வியுற்றதில் இருக்கவேண்டிய அவமானத்தை, பிரகாசம் தோல்வியில் ஏற்பட்ட மகிழ்ச்சி அடக்கிவிட்டது! ஒரு காங்கிரஸ் காரராவது கவலைப்பட்டு முகத்தைக் கூடச் சுழித்துக்கொள்ள

(11-ம் பக்கம் பார்க்க)

திராவிடநாடு

காஞ்சி] 21—11—54 [ஞாயிறு

கை விரிக்கிறார்!

தென்னிந்தியாவின் சிறந்த தொரு குடிசைத் தொழிலான தீப்பெட்டி உற்பத்தியைப்பற்றி எல்லோரும் அறிவர். அந்தத் தொழில் நசித்து வரும் ஆபத்தைக் குறித்து அடிக்கடி எச்சரிக்கையும் கிளம்பாமலில்லை.

ஆலைகளுக்குக் கிடைக்கும் சலுகைகள் பல தங்களுக்குக் கிடைக்கவில்லையென்பது தீப்பெட்டி, குடிசைத் தொழிலாளரின் குமுறலாகும்.

ஆலைகளின் மூலம்உற்பத்திசெய்யப்படும் நவீன முறைகளுக்கு ஆக்கம் தரப்படுவது அவசியமே என்றாலும்—தனிப்பட்டோருக்கு கிடைக்கும் லாபம் பெரிதா! பல்லாயிரக் கணக்கான மக்களின் வயிற்றைக் கழுவச்செய்யும் தொழில் முக்கியமா!! என்று பார்த்தால், இன்றுள்ள முதலாளித்துவ சமுதாய அமைப்பில், மக்களின் வாழ்வே இன்றியமையாததாகும்.

அதனால் தான், ஆலையின் வளர்ச்சியை ஓரளவு கட்டுப்படுத்தி, குடிசைத் தொழிலாளரின் வாழ்வுக்கு வழி செய்யவேண்டுமென நம் போன்றோர் வலியுறுத்தி வருகிறோம் — கைத்தறி, தீப்பெட்டி முதலியவைகளைப்பற்றி.

ஆலை உற்பத்தியைக் கட்டுப்படுத்தினால்தான், தீப்பெட்டி செய்யும் குடிசைத் தொழில் வாழமுடியும் என்பது நீண்ட நாள் கோரிக்கையாகும்.

இந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் எண்ணம் கிடையாதாம், சர்க்காருக்கு! டில்லி மந்திரி கிருஷ்ணமாச்சாரியார் தெரிவிக்கிறார் — டில்லி, பார்லிமெண்டில்.

தெரிவிக்கிறார், அவர்! எந்த சர்க்காருக்கு? காந்தீய நிர்மாணத் திட்டத்தை அமுல் நடத்துவதாக, கதருக்கும், வேறு பல கண்றாவிகளுக்கும் செலவழிக்கும் சர்க்காருக்கு! குடிசைத் தொழிலே முக்கியம் எனக்கூறும் காங்கிரஸ் சர்க்காருக்கு!!

கைவிரிக்கிறார் — ஆச்சாரியார். அவருக்கென்ன, 'கொள்ளையன்' கம்பெனி வாழ வேண்டும்! மக்கள் எப்படிப் போனால் என்ன!!

'எவ்விதயோசனையும் இல்லையாம்'—கூறுகிறது, டில்லி! என்ன கூறுமோ, சென்னை!!

★

'தேசீயம்' செல்லும் பாதை

"போர் வெறியை மூட்டுகிறது"

*

"நடத்தை சரியில்லை. நயவஞ்சகமாக நடக்கிறது."

*

"நம்மை மிரட்ட பாகிஸ்தானை கருவியாக்குகிறது!"

*

"நல்லெண்ணம் சிறிதுமில்லை உலகாளும் வெறி, ஒரு சிறிதும் அடங்கவில்லை"

*

காற்றுக் கோழியின் திசை திரும்பியிருக்கிறது! கடந்த சில மாதங்களாக, இவ்வண்ணம், பேசத் தலைப்பட்டிருக்கிறார்கள் — காங்கிரஸ் தலைவர்கள்!! அமெரிக்காவின் பாசம்—அது காட்டும் நேசம்—நேருவுக்கு வழங்கப்பட்ட வரவேற்பு—விஜயலட்சுமிக்குக் கிடைக்கும் விருந்துபசாரம், ஆகிய பெருமைகளை, அன்றாடம் பேசிப் பெருமைப்பட்டுக்கொண்ட, அதே காங்கிரஸ்காரர்கள் தான் இன்று இவ்வண்ணம் பேசி வருகிறார்கள்.

அதுமட்டுமல்ல! எந்த ரஷ்யாவையும், சீனாவையும் அமெரிக்கா பகைக்கிறது என்பதற்காக இவர்களும் பகைத்துக்கொண்டு, 'கம்யூனிசமாவது! கத்தரிக்காயாவது!!' 'ரஷ்யா, ஒரு ஏகாதிபத்திய நாடு!' 'சீனா, ரஷ்யாவின் எடுபிடி!' என்றெல்லாம் ஏசிப் பேசினரோ, அந்த நாடுகளின் அங்க லட்சணங்களைப் பற்றியும், வர்ணிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்—அதுவும் நேருவின் திசை மாறுகிறது எனத் தெரிந்ததும்!

அதுவரையில், மகிழ்ச்சியே நமக்கு.

இந்த மனமாற்றம், சர்வதேச அரங்கில், இந்தியா 'சிவப்பு'ப் பக்கம் சென்று கொண்டிருக்கிறதோ—என்கிற சந்தேகத்தை அதிகமாக்கி வருகிறது. டில்லியில், 'இந்தியாவை சோஷியலிச அடிப்படை நாடாக ஆக்கவேண்டும்', எனப் பண்டிதர் வெளியிட்ட ஒரு சொல், வெளி நாட்டினர்களை, சிந்திக்கச் செய்திருக்கிறது. 'இப்படியெல்லாம் பேசுகிறாரே, இந்த நேரு—எப்பக்கமும் சேராது, நடுநிலைமை வகிக்கும், சமாதானத்துக்குப் பாடுபடும் என்றெல்லாம் பேசுகிறாரே—இப்படித் தானே, ரஷ்யாவும் சீனாவும் பேசுகின்றன—அவர்களைப் போலத் தானோ, இவரும்;' என்கிற அச்சத்தையும், ஆருடங்களை அமெரிக்க தாசர்களிடையில் அதிகமாக்கியிருக்கிறது.

இதன் விளைவுதான், அமெரிக்கா, பாகிஸ்தான் சகாபோல, இன்றைய தினம் தென்படும் காட்சி; பாகிஸ்தானைக் காட்டி, இந்தியாவைப் பய முறுத்தும், வேதனை விளையாட்டில் ஈடுபட்டிருக்கிறது அமெரிக்கா.

இப்படித்தான் நேருமென்று, அமெரிக்காவுக்குப் பரிக்கு பாடியும், 'அமெரிக்கரைப் போலுண்டோ... அவனியில்?', என்று துதித்தும், காங்கிரஸ்பீரங்கிகள் முழக்கிய போது, எடுத்துச் சொன்னோம்; ஏசினர், பேசினர். ஆனால், இன்று அதே காங்கிரஸ் பீரங்கிகள், 'அமெரிக்காவின் சுய ரூபம்;', என்று அரசியல் விளக்கம் தர முன் வந்துள்ளன.

நெருக்கடியான, நேரம் இது.

உலக வல்லரசான அமெரிக்கா, தன் பிடியில் சிக்காத இந்தியாவை, அதட்டியோ, மிரட்டியோ, அடிபணியச் செய்ய முயல்கிறது! சில சமயங்களில் மோகப்பார்வையை வீசியும், இன்னும் சில நேரங்களில் 'பயில்வான்களை'க் காட்டியும், விளையாடிக் கொண்டிருக்கிறது.

இந்த நேரத்தில், நாட்டிலிருப்போர், பொறுப்பென்ன?

"அமெரிக்கா, நம்மை மிரட்டுகிறது!"—என்கின்றனர், காங்கிரஸ் தலைவர்கள்.

"இந்தப் போக்கினை நாம் எதிர்க்க வேண்டும்", என எச்சரிக்கின்றனர்,

நேரு, சீறுகிறார்!

ரஷ்யாவுக்கும் செல்லப் போகிறேன்— என்கிறார்!!

கம்யூனிஸ்டு சீனு, அழகுத் தொட்டில்!—என்கிறார். சமாதானத்துக்காகவே அது, வாழ்கிறது!—என வர்ணிக்கிறார்.

தெளிவாகத் தெரிகிறது—இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்குமிடையே, யாரும் எதிர்பாராத இடைவெளியொன்று உண்டாகி, அது வளர்ந்து கொண்டிருப்பது.

*

"இந்த இடைவெளி, இந்தியாவை சிவப்பாக்கிவிடுமா?"

"பண்டித நேருவை கம்யூனிஸ்டாக்கி விடுமா!"

"அமெரிக்காவின் ஆதிக்கப் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்வார்களா?"

"முதலாளித்துவ சமுதாய அமைப்புக்குக் குழிதோண்டிமூடப்படுமா?"

*

"செச்சே! வெறுங்கனவு இது!"

"பொய்மான், இதை நம்பமுடியாது"

"காங்கிரசே ஒரு முதலாளித்துவ முகாமாயிற்றே! எப்படி, அதை ஒழிக்கக் கச்சை கட்டும்?"

"சர்வதேச அரங்கில் தனது நிலையை உயர்த்த, நேரு கையாளும் தற்கால அரசியல் கொள்கையே அன்றி—நிரந்தரமானதல்ல"

*

அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஏற்படும் இடைவெளியைக் கண்டு, ஆசைகளை வளர்த்துக்கொள்வோரும், அது தவறெனக் கண்டிப்போரும் இருக்கிறார்கள், நாட்டில்!

இந்த 'இடைவெளி' எந்தளவுக்கு நீடிக்கும்—நீடித்த பலன் தருமா—என்று யோசிப்பது, வீண் வேலை. ஏனெனில், நேருவின் தலைமையில், நிலையான தலைகீழ் மாற்றம், சாத்தியமே அல்ல.

அது, வேறு விஷயம். ஆனால், தோழர்களின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புவது, "அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்குமிடையே, ஒரு இடைவெளி ஏற்பட்டிருக்கிறது" என்கிற உண்மையைத்தான்.

அமெரிக்கா, செல்லும் வழி சரியல்ல!—என்று கூறப்படுகிறது.

அதனைக் கண்டித்து, **சமாதானம் நாடுவதே நம் கடன்!** — என்கிறார், பண்டிதநேரு.

இந்த இடைவெளியில், பண்டிதரைப் பம்பரமாக்கும் வித்தை கற்ற விற்பன்னர்கள் என்ன செய்வர்? அவரை, 'இந்திரன்; சந்திரன்;' என்று போற்றும் நண்பர் குழாம், என்ன செய்யவேண்டும்? 'நேருவின் தலைமையே தேவை;', என்று அலறும் ஆப்தர்கள் செய்யவேண்டியதென்ன?

அவர் பக்கம் நின்று, ஆவன செய்வதே; — என்பீர்கள், நீங்கள்.

அத்தகையவரா, 'அன்பர்', **பிர்லா!** கோடீஸ்வரர் அல்லவா? அதனால், சமீபத்தில், அமெரிக்க நாட்டுக்குப் பறந்து சென்று 'வெள்ளை மாளிகை'க்குள் நுழைந்து ஜனாதிபதி ட்ரூமனுடன் சல்லாப உரையாடல் நடத்தியிருக்கிறார்.

காந்தியடிகள் உயிரோடிருந்த போது தனது மாளிகையையே அவருக்குக் கொடுத்த பிர்லா—இப்போதும், பண்டிதநேரு பம்பாய்க்கு வந்தால் 'மலபார் ஹில்சி'லிருக்கும் தனது பங்களாவில் வாசம் செய்யச் சொல்லும் பிர்லா—இந்திய முன்னேற்றமே எங்கள் நோக்கம் என்று கூறிடும் பிர்லா—நேருவுக்கு மாலை போடவும் காங்கிரஸ் மாநாடுகளுக்கு நிதி உதவவும் தயங்காத பிர்லா—காந்தியடிகளின் நினைவு நிதிக்கும், கஸ்தூரிபா நிதிக்கும் பணம் தருகிற பிர்லா—ராசேந்திரரையும் அவர் போன்ற ஒவ்வொரு காங்கிரஸ் தலைவர்களையும் போற்றிப் புகழத் தயங்காத பிர்லா—போயிருக்கிறார், அமெரிக்காவுக்கு; பேசியிருக்கிறார், ட்ரூமனுடன்.

பிர்லாவின் குடும்பத்தைப் பற்றி, அதோ வரும், தேசிய அய்யங்காரைக் கேளுங்கள் — சொல்வார். "பெரிய தர்மவான்களாச்சே, அவா! அடடா, எத்தனைக் காரியங்களுக்கு நிதி உதவி செய்திருக்கிறா, தெரியுமோ? அதிலும் கல்வி விஷயம் என்றா, கற்கண்டாச்சே, அவாளுக்கு! பணம் மட்டுமில்லே, குணமும் அப்படி. இங்கேயிருக்கிற கழகத்தா, எதேர், திட்டுறாளேன்னு நீங்க, கன்னாபின்னான்னு நினைக்கப்படாது. கலியுகக் கர்ணன் அவா! தேசம், முன்னேறணும்—சகலரும் முன்னுக்கு வரணும் — பலர் நம்பதயவாலே முன்னுக்கு வரணும் என்கிற விஷயத்திலே, அபார சிரத்தையுண்டு, அந்தக் குடும்பத்துக்கு"

கனிவு சொட்டும், விளக்கத்தில்! தேசிய அய்யங்கார் என்ன — அவருடைய தலைவர்கள் கூட — பிர்லாவின் குடும்பத்தைப் பலபட புகழ்ந்திருக்கிறார்கள். அப்படிப் பட்ட பிர்லா, அதோ, வெள்ளை மாளிகையில்! ட்ரூமனுடன்!!

பெரிய கோடீஸ்வரர் — போனார் —வந்தது வந்தோம் ட்ரூமன் என்கிற பெரிய ஆளையும் பார்த்து விட்டுப் போவோம், என்கிற கருத்தில் அங்கு சென்றார்—என்று அல்ல, கிடைத்திருக்கும் செய்தி.

ட்ரூமனும், பிர்லாவும் பேசினராம்!

எதைப்பற்றி?

இந்தியாவின் பொருளாதார நிலைபற்றி!!

குபேர நாட்டு அதிபனும், ஒரு கோடீஸ்வரனும், வேறு எதைப்பற்றிப் பேசுவார்கள்? ஐந்தாண்டுத் திட்டம்! அணைக் கட்டும் முயற்சி!—இப்படியா பேசுவார்கள்? **பொருளாதார நிலைகுறித்துப் பேசினார்களாம்!**

அவர்கள் என்ன பேசியிருக்க முடியும்? ஆலைத் தொழிலாளியின் அவதி — ஏழை விவசாயியின் தொல்லை—பணம் ஒரு பக்கம் குவியும் கோலம் — மற்றோர் பக்கம் வறுமை தாண்டவமாடும் கோரம்—இதைபபற்றியா அவர்கள் பேசியிருக்கமுடியும்?

இராது, இராது! நிச்சயமாக இராது!

*

"ஹலோ, மிஸ்டர் பிர்லா! இந்த நேரு, என்னென்னமோ பேசுகிறாரே. இப்படிப்பட்ட நிலையில், பணத்தைப் போட்டு, தொழில்களை ஆரம்பிப்பது சரியோ?"

"நேருவுக்கு ஏன் பிரபு அஞ்சுகிறீர்கள்? நாங்களெல்லாம் எதற்கு இருக்கிறோம்?"

"இருந்தென்ன; உங்களால் நேருவின் கூற்றைக் கொஞ்சம்கூட கண்டிக்கமுடியவில்லையே..."

"கண்டிப்பதால், வீண் விரோதம் தான் ஏற்படும். இந்த ஜனங்களும் எங்கள்மீது பாய்வார்கள். பேசாமலிருந்துவிட்டு, நாம் செய்யவேண்

டிய காரியங்களைமட்டும் செய்து கொண்டால் போதாதோ?"

"அப்படி என்ன செய்யமுடியும்?"

"மற்றவர்கள் தொல்லைக்கும்—மேடையில் பேசும்போது, ஜனங்களுக்கு உற்சாகம் கொடுக்கும் விதத்திலும், சோஷியலிசம் அது இது என்று பேசினாலும், எங்கள் சொல்லை என்றாவது தட்டியிருக்கிறாரோ நேரு?"

"அப்படியா!"

"ஆமாம்! சோஷியலிசம் பற்றி இவ்வளவு சண்டப்பிரசண்டம் செய்கிறாரே — அத்தகைய நேரு, எங்களைப் போன்ற முதலாளிகளுக்கு உதவுவதற்கென்று பதினேழரை கோடி ரூபாயை சர். ஏ. ராமசாமி முதலியாரின் தலைமையின் கீழ் ஒதுக்கியிருக்கிறார். தெரியுமோ?"

"அப்படியானால், நிச்சயம், நாங்கள் பயப்படுகிறபடி நிலைமை மாறாது"

"மாறவிடுவோமா, நாங்கள்?"

"என்னமோ! கம்யூனிச அபாயம் வந்தால், எங்களுக்குமட்டுமல்ல, உங்களுக்கும் ஆபத்துதான். அதனால்தான் நாங்கள் இவ்வளவு கெடுபிடியோடிருக்கிறோம்"

"எங்கள் ஆதரவு என்றும் உண்டு உங்களுக்கு......"

"அப்படியானால் நேரு......!"

"அவர் பேசுவதுபற்றிக் கவலைப்படாதீர்கள் — நடக்கப்போவதைப் பற்றி நினையுங்கள்—நாடே, எங்கள் வசம்! என்ன செய்யமுடியும் அவரால்? நாங்கள் நினைத்தால், இந்தியப் பொருளாதாரத்தையே, சீர்குலைத்து சின்னபின்னமாக்கிட முடியும். நண்பர் டாடாவைத் தெரியுமோ?"

"தெரியாதா, என்ன!"

"அவர் நினைத்தால் பல லட்சம் பேர் வாழும் பம்பாயை இருட்டாக்கி விடுவார்! அங்குள்ள மின்சாரக் கம்பெனி அவருடையது!! இது போலத்தான், எதுவும். எங்கள் ஒத்துழைப்பு இல்லாமல், எதையும் செய்யமுடியாது அவர்களால்..."

"அப்படித்தானிருக்கவேண்டும்—இந்த நேரு என்னென்னமோ, பேசுகிறாரே—என்ன நேருமோ என்று கொஞ்சம் பயந்தான் எனக்கு"

"கவலைப்படாதீர்! நாங்கள் இருக்கிறோம்!!"

*

இப்படித்தானே உரையாடல் நடந்திருக்கமுடியும் — கோடீஸ்வரர் பிர்லா; குபேரபுரித் தலைவர் ட்ருமன். வேறெப்படிப் பேசுவர்?

அதிலும் பொருளாதார நிலை பற்றியும் மற்றும் பல சில்லரை விஷயங்களையும், இருவரும் விவாதித்தனராம். பிர்லா, அரசியல்வாதியல்ல; ஆயினும், ட்ருமனுடன் 'அரசியல் சில்லரை'களைப்பற்றியும் பேசியிருக்கிறார். அந்தச் சில்லரை விஷயங்கள் எதுவாயிருக்கமுடியும்? அரிசி விலை என்ன? பருப்பு ரூபாய்க்கு எத்தனை படி, என்பதா? நிச்சயமாக இருக்காது — இந்தியாவின் மற்ற நிலைமைகளைப்பற்றி, ட்ருமனுக்குத் தெளிவாக்கியிருப்பார்—எடுத்து விளக்கியிருப்பார்.

அமெரிக்கா போர்க்கோலம் பூணுகிறது!- என்கின்றனர், நேருவின் தோழர்கள்

பாகிஸ்தானைப் பயில்வானாக்குவதைப் பாரீர்! — என்று அங்கலாய்க்கின்றனர்.

சமாதானமே—எமது நோக்கம். சீனாவும் ரஷ்யாவும் அதற்கே பாடுபடுகின்றன. சீனா சென்றுவந்த நான், ரஷ்யாவுக்கும் போகப் போகிறேன்—என்கிறார், அதிர்ச்சி வைத்தியத்தில் நம்பிக்கையுள்ள நேரு.

அவரது நண்பரான கோடீஸ்வரர் பிர்லாவோ, வெள்ளை மாளிகையில், சல்லாப உரையாடல் நடத்துகிறார் ட்ருமனுடன். இந்திய விவகாரங்களைப் பற்றி, விவாதிக்கிறார்!

பிர்லாவைப் பெருந் தோழன் எனப்பாராட்டாத காங்கிரஸ் தலைவர்கள் கிடையாது — பிர்லாவின் கூட்டத்துக்கு உதவ நேரு சர்க்கார் "நிதி கார்ப்பரேஷன்" ஏற்பாடு செய்து பதினேழரை கோடி ரூபாய்களை ஒதுக்குகிறது. அவரோ, விபீடணவேலை செய்கிறார்! அமெரிக்காவுடன் ஒப்பந்தம் பேசச் சென்று, உரையாடல் நடத்துகிறார்!!

'பிர்லாக்கள்' — வாழ்கிறார்கள்; உதவியும் பெறுகிறார்கள், சர்க்காரி விருந்து.

இப்படிப்பட்ட பிர்லாக்களைப் போற்றியும், அவர்கள் வளர உதவி செய்தும், அத்தகையோருடைய தொடர்பு ஆனந்தமான தென்றும், நம்பிக்கிடக்கிறார்கள், தேசியத் தோழர்கள்.

அவர்களோ, 'ஒப்பந்தம்' நடத்துகின்றனர்—வெளிநாட்டு முதலாளிகளுடன்; இந்நிலையில், தேஷ்முக் வேறு தெரிவிக்கிறார் டில்லி பார்லிமெண்டில்—நவம்பர் 17-ந் தேதி—"வெளிநாட்டு மூலதனம் எவ்வளவு வேண்டுமானாலும் வரட்டும். ஆனால், இந்திய முதலாளிகளின் கையிலேயே இருக்க வேண்டும்"—என்பதாக.

அந்த இந்திய முதலாளிகளின் தலைவர் 'பிர்லா'வின் போக்கு, இது; இத்தகைய 'பணமுதலை'களை, தேசோத்தாரகர்கள் என நம்புகிறது, இந்திய தேசிய இயக்கம்.

இதோ ஒரு சேதி — சென்னை மேயர் தேர்தலுக்கு செட்டிநாட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த எம். ஏ. சிதம்பரத்தை சென்னைக் காங்கிரஸ்கமிட்டி ஏகமனதாகத் தேர்ந்தெடுத்ததாம். நாடு முழுமையும், இதுபோல, பட்டக்காரர், பணாதிபதி, பெருமிராசுதார், கிண்டிரேஸ் மெம்பர், இப்படிப்பட்ட பணக்காரர்களின் பக்கமே, தேசிய இயக்கம் சென்றுகொண்டிருக்கிறது. சிதம்பரம்செட்டியார், கதரைத் தொட்டறியாத கனவான்! ஆனால், காசுக்காரர்! போதும், அந்தத் தகுதி — போடு, வோட்டு. தேர்ந்தெடு, நகரசபைக்கு. போற்று புகழ் பாடு; திருவருள் நாடு; தேடு! —இப்படிச் சென்றுகொண்டிருக்கிறது, தேசியப் பாதை.

இத்தகையவர்கள் போடும் 'ஜே' கோஷத்தில் மயங்கும் நேருவோ, இவர்களையெல்லாம் சரிப்படுத்தி விடலாம்—காங்கிரசுக்குள்தான் வந்துவிட்டார்களே—என்ற பெருமிதத்தில், 'உலக சமாதானம்', 'ஒன்றிய ஆசியா' 'உன்னத எதிர்காலம்' என்றெல்லாம் முழக்கமிடுகிறார். அந்தக் கூட்டத்துக்குச் சென்று, தலையாட்டி, பூமாலை சூட்டிவிட்டு, அதே பிரபுக்கள், 'ஒப்பந்தம்' பேசுகின்றனர் — அமெரிக்காவுடன்!! "நாங்களிருக்கும்போது பயம் என்ன?"—என்று தைரியம் தருகின்றனர்.

பிர்லா, பெரிய பிரபுமட்டுமல்ல; தேசோத்தாரகர்!—எனச் செப்பிய தேசியத் தலைவர்கள், பலருண்டு. அவர், அதோ, ட்ருமனைச் சந்தித்துவிட்டு வருகிறார். அந்த ட்ருமனே, அருகிலிருக்கும் பாகிஸ்தானைப் பயில்வானாக்க முயலுகிறார். அது காணும் நேருவோ, அலறுகிறார்—அந்த ஆவேசத்தில் ஏதேதோ பேசுகிறார்!

தேசியம், சென்றுகொண்டிருக்கும் பாதை, இது. சிந்தித்தால், விளைவுகள் தெரியும். வேதனைப் பாதையில் சென்றுகொண்டிருக்கும் வேகமும் விளங்கும்!!

★

[illegible]-ம் பக்க தொடர்ச்சி

வில்லை. எனவே பிரகாசம் தோல்விக்குக் கண்ணிவைத்தது காங்கிரஸ்காரர்கள்தான் என்பதும், கண்ணிவைத்து வீழ்த்தக் காரணம் பிரகாசத்தின்மீதுள்ள வெறுப்புத்தான் என்பதும் படுதாவுக்குள் அடக்கிவிட முடியாத நடப்பு. உண்மையில் காங்கிரஸ்காரர்கள் காங்கிரசுக் கொள்கைக்காகச் செயல்பட வேண்டுமென்ற கட்டுப்பாட்டிற்கு மதிப்பளித்திருந்தால் ஒரு வாக்கு வித்தியாசத்தில் தோற்றுக் கேவலப்பட்ட பிரகாசம் அமைச்சரவையை ஐந்து வாக்கு அதிகம்பெற்ற வெற்றியாக மாற்றி இருக்கமுடியும். அது நடக்கவில்லை. எப்படியும் பிரகாசத்தை வெளியேற்றவேண்டும் என்ற துன்மூப்பு, மதுவிலக்கை எதிர்ப்போரைத் தம் பக்கம் திருப்பும் முயற்சியில் ஈடுபட காங்கிரசுக்காரர்களை விடவில்லை.

இத்தகைய மோசமான காங்கிரசுக்காரர்களின் காலடியில்தான் இன்றையக் காங்கிரஸ் கட்சி கிடக்கிறது என்பதை நிரூபிக்க இதைவிட வேறு ஆதாரம் காட்டமுடியாது.

("கண்ணாடி")

'கனுங்கோ' கமிட்டி!

நமது நாட்டின் ஜவுளித்தொழில் நிலைமையை ஆராய்ந்தறிந்து தகுந்த சிபாரிசுகளைச் செய்ய, யூனியன் அரசாங்கத்தினரால் 1952 நவம்பரில் திரு. நித்யானந்த கனுங்கோ தலைமையில் **ஜவுளித்தொழில் விசாரணைக் கமிட்டி** யொன்று அமைக்கப்பட்டது. அக்கமிட்டி, சரியாக 22 மாதங்களுக்குப்பின் தனது அறிக்கையைத் தயாரித்து அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளது.

அவ்வறிக்கையில், நூற்பு, நெசவு கைத்தறி நெசவு ஆகியபிரிவுகளைப் பற்றிய புள்ளி விவரங்களும், பரிசிலனைகளும், சிபாரிசுகளும் இடம் பெற்றுள்ளன. இந்த அறிக்கையில் காணும் பல்வேறு அம்சங்களையும் ஆராய்ந்து அபிப்ராயம்கூற அகில இந்திய கைத்தறி போர்டு அண்மையில் பம்பாயில் கூடவிருக்கிறதென்ற செய்தியும் வெளியாகியுள்ளது. இந்த சூழ்நிலையில் நாம் அவ்வறிக்கை பற்றிச் சிறிது விமர்சிக்க வேண்டியுள்ளது.

முதலில், ஆலைத்தொழில் பற்றி கமிட்டி தந்துள்ள புள்ளிவிவரம் நீங்கலாக, கைத்தறி நெசவுத் தொழில் பற்றி அறிக்கையில் காணுகின்ற புள்ளிவிவரங்களை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பாரதம்பூராவும் உள்ள கைத்தறிகளின் எண்ணிக்கையை 12 லட்சமாகக் கமிட்டியார் கணக்கில் எடுத்துக் கொண்டுள்ளது வெட்கக்கேடானதாகும். கமிட்டியாருக்குக் கிடைத்துள்ள-அல்லது யாராலோ தரப்பட்டுள்ள இப்புள்ளியானது உண்மைக்கு மாறுபட்டதாகும்.

இரண்டாவதாக, கைத்தறி நெசவாளர்கள் எவ்வளவோ பெரிய போராட்டங்களை நடத்தி சிறிய அளவில் பெற்றுள்ள ரக ஒதுக்கீடு சலுகையைகூட கமிட்டி தனது அறிக்கையில் 1960-க்குப் பின்னரும் நீடிக்கக்கூடாதென மில் நெசவுக்கு ஆதரவாகக் குறிப்பிட்டுள்ளது. இந்தச் சிபார்சு, "உள்ளதும் போச்சுதடா நொள்ளக் கண்ணு" என கிராம மக்கள் கூறும் உபமானத்திற்கு ஏற்றாற்போலிருக்கிறது.

கமிட்டியார் சென்ற இடங்களிலெல்லாம், கைத்தறி நெசவுக்கு சேலை,வேஷ்டிரக ஒதுக்கல் வேண்டுமென்று சம்பந்தபட்டவர்கள் வற்புறுத்தியதற்குக் கிடைத்துள்ள கைமேல் பலன் இது! இந்த சிபாரிசுகள் எதைக்குறிக்கிறதென்றால், கமிட்டியில் அங்கம் வகித்தவர்களுக்கு தேசப் பொருளாதாரத்தில் கைத்தறி நெசவுத் தொழிலுக்கு எத்தகைய ஸ்தானத்தை வழங்குவது என்பதில் உள்ள ஞான சூன்யத்தையே காட்டுகிறது. அதற்கு உதாரணமாக கமிட்டியாரின் சிபாரிசுகளில் கீழ்காணும் முரண்பாட்டைப் பாருங்கள்.

"மில்களின் துணி உற்பத்தியை வருடத்திற்கு 500 கோடி கெஜம் என்ற அளவில் நிறுத்த வேண்டும். நெசவுப் பகுதியை விஸ்தரிக்க அனுமதிக்கக்கூடாது"

இதனுடைய அர்த்தமென்ன? நெசவாலைகளின் துணி உற்பத்தியானது ஆண்டுக்கு 500 கோடி கெஜத்திற்குமேல் போகாமல் தடுத்து நிறுத்த வேண்டுமென்பதும், இன்றுள்ள ஆலைத்தறிகளின் எண்ணிக்கையை மேற்கொண்டு உயர்த்தாமல் தடுக்க வேண்டுமென்பதும்தான். இதே மூச்சில் அறிக்கையின் பிறபகுதி கூறுவதைப் பாருங்கள்.

"நெசவாலைத் தொழிலின் இயந்திர சாதனங்கள் பழயனவாயும், மாற்றப்பட வேண்டியவைகளாகவும் உள்ளன. கைத்தொழில் அபிவிருத்தி கார்பரேஷன் ஏற்பட்டதையொட்டி இதன் புனரமைப்பு உரிய கவனத்தைப்பெறும்...ஜவுளித் தொழில் ஆராய்ச்சி ஸ்தாபனங்கள் ஜவுளித் தொழில் இயந்திரங்களை அபிவிருத்தி செய்தல் பற்றி ஆராய வேண்டும்."

பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழனாக இவ்வார்த்தைகள் இல்லையா பாருங்கள். ஒருபக்கம் உயர்ந்தபட்ச அளவாக நெசவாலையின் துணி உற்பத்தி இவ்வளவுதானிருக்க வேண்டுமென்று கூறிவிட்டு, நெசவு இயந்திரங்களை விஸ்தரிக்கக் கூடாதென்றும் சொல்லிவிட்டு, அடுத்தாற்போல் இன்றுள்ள இயந்திரங்கள் பழயன; அவை மாற்றப்படவேண்டும்; அதுவும் அபிவிருத்தியான புதிய அமைப்பில் நடைபெற ஆராய்ச்சிகள் நடத்தப்பட வேண்டும் என்றும் கமிட்டியார் கூறியுள்ள முரண்பாட்டைக் கவனிக்க வேண்டும்.

இதிலிருந்து ஒன்றை நம்மால் நன்றாக யூகிக்கமுடிகிறது: கமிட்டியார் பரிபூரணமாக நெசவாலைத் தொழிலதிபர்களின் அபிலாஷைகளையே திருப்திசெய்ய முயன்றிருக்கின்றனர் என்பதை, நமது இச்சந்தேகத்தை முற்றிலும் ஊர்ஜிதம் செய்கிறது, கமிட்டியாரின் கைத்தறிகளை முற்றிலும் வரும் 20 ஆண்டுக் காலத்திற்குள் ஒழித்துவிட வேண்டுமென்கிற சிபாரிசு.

கைத்தறியின் அமைப்பில் மாறுதல் வேண்டுமென்பதையும், அதன் உற்பத்தி சக்தி அதிகமாகவேண்டுமென்பதையும் நாம் என்றுமே வற்புறுத்தி வந்துள்ளோம். இன்றையக் கைத்தறிகளின் அமைப்பு

பல்லாயிரம் பேர் படிக்கும்
ஒரே ஒரு இலக்கிய வார ஏடு
தென்றல்
ஆசிரியர்: கண்ணதாசன்
27-11-54 இதழில்
கண்ணதாசன் எழுதும்
ஆயிரம் தீவு
அங்கயற்கண்ணி
(சரித்திரத் தொடர் கதை..)
தனி இதழ் - ஆண்டுச்சந்தா
விலை 2 அணா - ரூபாய் 6-0-0
ஏஜண்டு
[illegible]
தென்றல்.. சென்னை-14

சென்ற தலைமுறையின் போது இது போன்று இருக்கவில்லையென்பதைப் புரிந்து கொண்டவர்கள் நம் கருத்தில் மாறுபாடு தெரிவிக்கமாட்டார்கள். ஆனால், கைத்தறி நெசவுத் தொழிலின் கலை அம்சமும், தொழில் நுணுக்கமும் சிதைவுபடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்பதையும் மாற்றம் விரும்பும்போதே நாம் அறிவிக்கவும் செய்கிறோம்.

மாற்றம் வேண்டுமென்பதற்காகவோ, தொழில் துறையில் புரட்சிகரமான விளைவையுண்டாக்கி விட்டோமெனப் பறைசாற்றிக் கொள்வதற்காகவோ ஒரேயடியாக எல்லாக் கைத்தறிகளையும், விசைத்தறிகளாக மாற்றிவிட வேண்டும் என்ற முட்டாள்தனமான வாதமானது, கைத்தறித் தொழில் பல தலைமுறைகளாகப் பெற்றெடுத்த கலைத்தொழில் நுணுக்கத்திற்கு சமாதியெழுப்பிவிடும் என்பதைப் புரிந்துகொண்டாக வேண்டும்.

வெகுஜன உபயோகத்திற்கான சாதாரண—மத்தியமான ரகங்களைக் கூட விசைத்தறிகளைக் காட்டிலும் கைத்தறிகளில் தயாரிப்பதே சிறந்ததாகவும், நீண்ட நாளைய உபயோகத்திற்கேற்றதாகவும் இருக்கும், துணியின் தரத்தைமட்டும் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்த முறையான நடவடிக்கை எடுத்துக் கொண்டால் போதுமானது. கோட்டிங், சில்வகை டவல்கள், ஷர்ட்டிங் போன்ற ரகங்களை வேண்டுமானால் பெடல் தறிகள்போன்ற புதிய அமைப்பில் தயாரிக்க முயற்சிக்கலாம். இதுவும் 36 அங்குல அகலத்திற்குமேல் உள்ள துணி ரகங்களை மில்கள் தயாரிக்கக்கூடாதென்று கூறும்போது அடிபட்டுப் போகிறது

சுருக்கமாகச் சொல்வதென்றால், ரக ஒதுக்கீடு கிடைத்துவிட்டால் கைத்தறியில் மாற்றம்வேண்டும் என்கின்ற கோரிக்கைகூட அவசியமில்லாமல் போகின்றது. என்றாலும் துணி வாங்கும் பொது மக்களுக்குக் குறைந்த விலையில் நல்ல தரமுள்ள ரகத் துணிகளை வழங்க வேண்டிய பொறுப்பை கைத்தறி நெசவுத்தொழில் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளதால் சாத்தியமான மாற்றத்திற்கு தகுந்த முறையில் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுவது தவிர்க்கமுடியாததுதான்.

கடைசியாகக் கமிட்டியின் அறிக்கையில் **"நியாயமான அளவு ஊதியம் பெறுவர நெசவாளருக்கு சமுதாயம் வசதி செய்யவேண்டும்"** என்று கூறப்பட்டிருக்கிறது. நெசவாளர்களின் உயிர் வாழ்க்கைக்கு அரசாங்கம் உத்திரவாதம் செய்யும் வகையில் அவர்களின் தொழிலைப் பேணி வளர்க்க நாங்கள் கீழ்க்கண்ட சிபாரிசுகளைச் செய்கிறோம் என்று கூறவேண்டிய கமிட்டியின் அறிக்கையில், கைத்தறி நெசவுத் தொழில் பூண்டோடு ஒழிக்கப்பட வேண்டுவதற்கு வித்திட்டுள்ளதோடு, அரசாங்கம் காட்டியுள்ள சிறிய சலுகைகளையும் 1960க்குப் பின் நீடிக்கக்கூடாதெனப் பிடுங்கிக்கொள்ளவும் தூண்டிவிட்டு, எல்லாவற்றிற்கும் மேலாக பொது மக்களின் தயவில், பிழைக்க வழியிருந்தால் கைத்தறித்தொழில் பிழைத்துப்போகட்டுமென்றுகூறப்பட்டிருக்கிறது.

கைத்தறி நெசவுத் தொழிலில் கேந்திரமான இடத்தைப் பிடித்துக் கொண்டிருப்பவர்களும், இத்தொழிலின் சிறப்பை உலகெங்கும் கொண்டுசென்றவர்களுமான மாஸ்டர் வீவர்களைப்பற்றியும், கைத்தறி உற்பத்தியாளர்களைப்பற்றியும் அறிக்கையில் வெகுவாக ஒன்றும் குறிப்பிடாமல் நுனிப்புல் மேயப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன என்று தெரியவில்லை. இவர்களின் தொழில்துறை அந்தஸ்து எவ்வாறு இருந்தால் தேவலை என்றாவது அறிக்கையில் கூறியிருந்திருக்கலாம்.

ஒட்டுமொத்தமாக அறிக்கை கைத்தறி நெசவுத் தொழிலின் வளர்ச்சிக்கோ, பாதுகாப்பிற்கோ உதவுவதாக இல்லையென தைரியமாகக் கூறலாம். நாட்டிலுள்ள நெசவாளர்களும், கைத்தறியாளர்களும், இத்தொழிலையொட்டி நடைபெற்றுவரும் பல்வேறு உப தொழில்களைச் செய்வோரும், எதிர்பார்த்த அளவுக்கு அறிக்கையில் எவ்வித சிபாரிசுகளும் இல்லை. அதற்குப் பதிலாக பெரிய கை விரிப்பைத்தான் நம்மால் காணமுடிகிறது.

"கைத்தறி"

★

திருமணம்

தூத்துக்குடி தி. மு. கழகத் தோழர் எஸ். ஓ. வெற்றிவேல் அவர்கள் மகள் செயகாந்தத்திற்கும் பரமன்குறிச்சி எஸ். குமாரசுந்தரம் பி. ஏ. ஆனர்ஸ் அவர்களுக்கும் தூத்துக்குடி பகுத்தறிவு நிலையத்தில், ஜில்லா பதிவாளர் அவர்களால் பதிவுத் திருமணம் செய்யப்பட்டது.

சி. பி. சிற்றரசு

தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் 15-ந்தேதியிலிருந்து அன்றாடம் ஊசி போட்டுக் கொண்டும், நான்கு மணி நேரத்துக்கொரு முறை மருந்தும், இரவில் எண்ணெயும் சாப்பிட்டுக்கொண்டு வருகிறார். இப்படி ஒரு திங்கள் செய்யவேண்டுமென டாக்டர்கள் பணித்திருக்கிறார்கள். தற்போது பெங்களூரிலிருந்து வருகிறார்.

ஒரு புதுமை!

இந்த ஆண்டு நவம்பர் 7ஐ, ரஷ்ய சர்க்கார், புதுமையான முறையில் கொண்டாடி இருக்கிறது.

புரட்சி பூத்ததின் கொண்டாடப்படும் 37-வது விழாவாகும் இது!! வழக்கம்போல், தொழிலாளர் பவனி செஞ்சதுக்கக் கூட்டம், எல்லாம் சிறப்புற நடந்தன.

அதுமட்டுமின்றி அன்று நடந்த விருந்தில், ரஷ்யத் தலைவர் மாலங்கோவ், தனது துணைவியுடன் வந்திருந்து கலந்துகொண்டார். இதுவும், புதுமையே! எனினும், இதைவிடப் பெரிய புதுமை — அவரும் அவரது சகோதரர்களும், விருந்துக்கு வந்திருந்த அமெரிக்க-பிரிட்டன்—யுகோ—முதலிய பிற நாட்டு அரசியல் தூதர்களுடன் அளவளாவிய காட்சிதான்! உரையாடியது அத்தனையும், கொள்கைகளைப்பற்றியேயாம்! சகஜமான முறையில், இப்படி உரையாடுவது, தப்பபிப்பிராயங்களைக் களையும் நல்வழியாகும். இது, இதுவரை, நடைபெறாத புதுமை! எனவே, மகிழ்ச்சியைத் தருகிறது, நமக்கு. எங்கும் இப்படி நடைபெற்றால், நன்மை மலர மார்க்கமுண்டு.

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

மானேஜர்.



:28. உயர்நீதி மன்றத்தில்........!

சிறைக் கம்பிகளுக்கப்பால் தள்ளப்பட்டு, மறுபடியும் பூட்டப்பட்ட ஆறுமுகம் அப்படியே சிந்தனையில் ஆழ்ந்தவண்ணமிருந்தான்..

அவனுடைய வாழ்க்கையிலேயே முதன் முறையாக அப்பொழுதுதான் அவன் மனம் விட்டுப் பேசியிருக்கிறான். அவன் எதையெதை நினைத்தானோ அதையெல்லாம் ஒரு பெரிய மனிதரோடு பேசியிருக்கிறான். அவனுடைய மனதிலிருந்த பெரும் பாரத்தை இறக்கிவிட்ட உணர்ச்சி அவனுக்குத் தோன்றியது. இவ்வளவுக்கும் நெடுமாறன், அவனிடமிருந்து வார்த்தைகளை வாங்கவில்லை. அவனாகவேதான், தான் அழிந்துபோக வேண்டியவன் என்றும், தன்மேல் சாட்டப்பட்டிருக்கும் குற்றங்களுக்குத் தானே பொறுப்பாளி என்றும் கூறினான். இந்த உரையாடல் அவனுக்கிருந்த பெரும் தலைவலியைப் போக்கியது. தன்னைப்பற்றிக் கவலைப்படுபவர்கள் உலகத்தில் இருக்கிறார்கள் என்பதையும், தன்னைப் போல் சமுதாயத்தோடு போராடி உயிர் வாழ்பவர்களும் இருக்கிறார்கள் என்பதையும் உணர்ந்தபோது, அவனை அறியாமலே அவனுக்கு ஒரு புதிய உணர்ச்சி தோன்றியது. உலகத்திலே எதையும் கண்டு பயப்படுவதில் அர்த்தமில்லை என்பதும், பயந்து உயிர் வாழ்வது முடியாத காரியம் என்பதும் அவன் மனக்கண்முன் திரும்பத்திரும்பத் தோன்றியது.

தான் செய்த குற்றங்களுக்கு தான் மாத்திரம் காரணகர்த்தா இல்லை என்று அவனுக்கு நன்கு தெரிந்தது. தன்னுடைய பரிதாப நிலையை உலகத்துக்கு விளக்கி, தன்னைப்போல நாட்டிலே இருக்கும் ஆயிரக்கணக்கான ஆறுமுகங்களை மக்கள் கண்முன் கொண்டுவர வேண்டுமென்றுகூடத் தோன்றியது. அப்பொழுதும் மக்கள் மனந்திருந்துவார்கள் என்ற நம்பிக்கை அவனுக்குக் கிடையாது. மனித சமுதாயத்திற்குச் சவுக்கடி கொடுப்பது போல, உத்தமநாதபுரத்து வாசிகளின் வாழ்க்கையை ஊரறியக் கூறவேண்டுமென்று மாத்திரம் அவன் எண்ணத்தில் எழுச்சி வந்தது.

இப்பொழுது ஆறுமுகத்திற்கு நிச்சயமாகச் சாக விருப்பமில்லை. நடுச் சந்தியில்வந்து நின்று உத்தமநாதர் கொலையுண்ட காரணம், பொன்னியின் பரிதாப மரணம் எல்லாவற்றையும் விளக்கி 'ஓ' வென்று கத்த வேண்டுமென்றுதான் அவனுக்குத் தோன்றியது. கத்திக் கொண்டே இறந்தால் கூட அவன் கவலைப்படமாட்டான்.

குளிர்ந்து போயிருந்த தன் விரல்களால், உலர்ந்துபோயிருந்த தன் உதடுகளை தொட்டான். அவைகள் உள்ளத்தில் இருந்து எழுந்த உணர்ச்சி வெள்ளத்தை அடக்கிக் கொண்டு கிடந்தன. "முடியாது... ......! முடியாது......! வேண்டாம் ......!" என்று கத்திக்கொண்டே எழுந்து ஓடினான். எங்கே ஓடுவது? இரண்டடியில் சிறைக் கம்பிகளின் அருகில் வந்து, அவற்றைப் பிடித்துக்கொண்டான். தலையை 'டக்' 'டக்' என்று கம்பிகளில் இருமுறை மோதிக்கொண்டான். கண்களில் நீர் தாரை, தாரையாக வழிந்தது, "ஓ......! நான் வாழவேண்டும்......! தூக்குமேடை வேண்டாம்...! இனி ஒழுங்காக இருப்பேன்.........!" என்று அவனை அறியாமலே அவன் உதடுகள் புலம்பின.

"இந்தாப்பா. சரிதான் போய்ப் படு. இன்னும் நாலுநாள் இருக்கு. அதுக்குள்ளேயே புலம்ப ஆரம்பித்துவிட்டியே!" என்று கூறிக் கொண்டே போனான், வார்டர். ஆறுமுகம் திடுக்கிட்டுத் தலையைத் தூக்கிப் பார்த்தான். வார்டர் ஒரு கவலையுமின்றிச் சாவிக்கொத்தைக் கையில் ஆட்டியவண்ணமே நடந்து போய், வெளிவராண்டாக் கதவைச் சாத்திப் பூட்டிக்கொண்டு போய் விட்டான்!

வார்டரும் போனபிறகு, அந்தச் சிறைப்பகுதியில் ஜனநடமாட்டமே கிடையாது. ஒவ்வொரு அறைக்குள்ளிருந்தும், சில நிமிஷங்களுக்கு ஒரு தடவை "ஓ...! ஆ...!!" என்ற கூச்சல்களும், பெருமூச்சுகளும் தான்வந்துகொண்டிருந்தன. ஆறுமுகம் அப்படியே சிறைக்கம்பிகளைப் பிடித்துக்கொண்டு, தலையை அதில் சாய்த்தவண்ணம் உட்கார்ந்துவிட்டான். அவன் கண்களிலிருந்து விழுந்த நீர்த்துளிகள் கன்னத்தில் இறங்கி, கம்பிகளில் வழிந்து ஓடின.

இந்தக் காட்சியைத்தான் ஒவ்வொருநாளும் அவனுக்குச் சோறு கொடுக்கவரும் வார்டர் பார்த்துக் கொண்டிருந்தான். தினம் நெடுமாறனோடு பேசிவர, வர, ஆறுமுகத்திற்கு, தான் வாழ வேண்டுமென்றும், அதற்குப் போராடவேண்டும் என்ற எண்ணமும் வளர்ந்து கொண்டே இருந்தது.

ஒருவாரமாகியது. திங்களன்று ஹைகோர்ட்டில் ஆறுமுகத்தின் வழக்கு விசாரணை என்றும் அறிவிக்கப்பட்டது!

*

"ஆறுமுகம்!"

திடுக்கிட்டுத்திரும்பினான் ஆறுமுகம். நெடுமாறன் சிறைக்கம்பிகளுக்கு வெளியே நின்று கொண்டிருந்தான்.

"என்ன, ஆறுமுகம்! கோர்ட்டுக்குப்போகலாமா? தயார்தானே?',

"ஹிம்......" என்று இழுத்தவண்ணம் எழுந்தான், ஆறுமுகம்.

இதற்குள் இரு போலிஸ்காரர்களுடன், முன்னால் வந்த வார்டர் சிறைக் கதவைத் திறந்தான்.

'வாப்பா, ஆறுமுகம். தைரியமாக வா, போகலாம்!" என்று முன் நடந்தார் நெடுமாறன்.

சிறைக்கு வெளியே இருந்த போலிஸ் காரில் ஆறுமுகத்தை ஏற்றிவிட்டு அந்தப் போலிஸ்காரர்களும்ஏறி அமர்ந்தனர். நெடுமாறன் தன் காரில் போய் ஏறிக்கொண்டார்.

சில நிமிஷங்களில் சென்னை உயர் நீதி மன்றத்திற்குள் இரு கார்களும் நுழைந்தன.

நீதி மண்டபத்திற்குள் நுழையும் போதே ஆறுமுகத்திற்குத் தயக்கம் ஏற்பட்டது.

"ஏன்......பயம்?" என்று இழுத்தார் பின்னால் வந்த நெடுமாறன்.

"இங்கேஎவ்வளவுநாட்கள்வழக்கு நடக்கும்?"

"அதைப்பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய்? நீ சொல்லவேண்டியதெல்லாம் சில வார்த்தைகள் தான்! மற்றதை நாங்கள் பார்த்துக் கொள்வோம்!" என்றார் நெடுமாறன்.

"கோர்ட்டிலா, நானா பேசவேண்டும்?"

"ஆம்! ஆனால் நான்......"

'ஐயோ, என்னால் முடியாது...!"

"ஏன் முடியாது? நீ குற்றம் செய்ததை ஒத்துக்கொள்கிறாயா என்று கேட்பர். ஆம் (!) என்று ஒரு வார்த்தை கூறு, போதும்"

"அது கூட என்னால் கூறமுடியாது போலிருக்கு......"

"சொல்லித்தானே ஆகவேண்டும்!"

"நீங்கள் என் அருகில் இருப்பீர்களா?"

"பக்கத்திலேயே இருப்பேன்"

இதற்குள் கோர்ட்டு ஹாலுக்குள் வந்துவிட்டனர்.

குற்றவாளிக் கூண்டில் கொண்டு போய் உட்காரவைக்கப்பட்டான், ஆறுமுகம். அங்கே அமர்ந்தபின் தான், அவன் நிமிர்ந்து பார்த்தான். ஐயோ, அவன் கண்ட காட்சி அவனையே திகைக்கவைத்தது.

கீழ்க் கோர்ட்டிலிருந்த அத்தனை பேரும் அங்கும் அமர்ந்திருந்தனர். அதோடு மகாலிங்கத்திற்குப் பக்கத்தில், சர்க்கார் வக்கில் வாளாடி கிருஷ்ணசாமி அய்யரும் அமர்ந்திருந்தார். அந்தப் பாவி மனுஷன் தானே அவனிடமிருந்து வாக்கு மூலம் வாங்கிப்போனவர்,

அவருக்கு எதிரில் நெடுமாறன், நல்லமுத்து இருவரும் அமர்ந்திருந்தனர். பின்னால், அவன் தாய் அஞ்சலை, தங்கை செங்கமலம், வேறோர் பக்கத்தில் புஷ்பா, பாஸ்கர் முதலியோரும் அமர்ந்திருந்தனர். பின்னால், நூற்றுக்கதிகமான பெரிய மனிதர்கள் அமர்ந்திருந்தனர்.

இவர்கள் எல்லோரும் சுதந்திர மனிதர்கள், இப்பொழுது ஒன்று கூடி அவனைக் கழுவிலேற்றக் காத்துக்கொண்டிருக்கின்றனர், அதை நினைத்தபோது, அவனையறியாமல் அவன் தொண்டை அடைத்தது.

சட்டென்று சுட்டுத் தள்ளியிருக்கலாம்; அதைவிட்டு இப்படியெல்லாம் அவனைத் தொல்லை செய்வதேன்?

இந்த நேரத்தில், யாரோ டக் டக்கென்று தட்டுவது கேட்டுத் திரும்பினான்.

நீதிபதி வந்துகொண்டிருந்தார், எல்லோரும் எழுந்து நின்றனர், அவனும் எழுந்துநின்றான். நீதிபதி அமர்ந்ததும் எல்லோரும் அமர்ந்தனர், அவனும் உட்கார்ந்துகொண்டான்.

உடனே கோர்ட் சம்பிரதாயங்கள் நடைபெற்றன,

கோர்ட் குமாஸ்தா எழுந்து நீண்டதொரு அறிக்கையைப் படித்தார். "அரசாங்கத்திற்கும் ஆறுமுகத்திற்கும் நடக்கும் இந்த வழக்கில் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் ஜூரர்கள் கொடுத்த முடிவுப் படி......" என்று பூரா அறிக்கையும் படிக்கப்பத்துநிமிடமாகியது.

ஆறுமுகம் உத்தமநாதரைக் கொலை செய்ததோடில்லாமல், உடலையும் புதைத்தான் என்றும், பொன்னியைக் கழுத்தை நெறித்துக் கொலை செய்தானென்றும் இப்படி ஆறுமுகத்தின் பெயரை அடிக்கொரு தடவை கூறிக்கொண்டு தன் அறிக்கையை முடித்தார் குமாஸ்தா.

பின் நீதிபதி மேஜையைத் தட்டிவிட்டு, "பிரதிவாதி தன் கட்சியை எடுத்துக் கூறத் தயாரா?" என்றார்.

உடனே நெடுமாறன் எழுந்து "ஆம், நீதிபதியவர்களே! ஆறுமுகம் இங்கு சாட்டப்பட்டிருக்கும் குற்றங்களை ஒத்துக்கொள்கிறான்" என்றார்.

உடனே கோர்ட்டில் பலத்த ஆரவாரம்; முன்னால் உட்கார்ந்திருந்த சில பத்திரிகை நிருபர்கள் எழுந்து ஓடினர்.

நீதிபதி "அமைதி. அமைதி" என்று மறுபடியும் மேஜையைத் தட்டினார்.

மறுபடியும் நெடுமாறன், "கோர்ட்டார் அவர்களே! இந்த வழக்கில் ஆறுமுகத்தின்மீது சாட்டப்பட்டிருக்கும் குற்றங்களை இல்லையென்று வாதிப்பதில் அர்த்தமிருப்பதாக எனக்குப்படவில்லை. இருந்தபோதிலும், செய்யப்பட்டிருக்கும் குற்றங்களுக்கு ஆறுமுகம் எந்தளவு பொறுப்பாளி என்று விளக்குவதில் ஏதாவது இலாபம் ஏற்படலாம் என்று கருதுகிறேன். இந்த குற்றங்களுக்கு உள்ள முழுத் தண்டனையும் தாங்கூடிய அளவுக்கு ஆறுமுகம் பொறுப்பாளி அல்லவென்று நான் நிரூபிக்கமுடியும். அதைச் செய்து, கொடுக்கப்படும் தண்டனையைக் குறைத்தாலே பெரும்பணி என்று எண்ணுவேன்" என்று கூறி உட்கார்ந்தார், நெடுமாறன்.

நீதிபதி இதற்குப் பதில் கூறுவதற்குள் கிருஷ்ணசாமி எழுந்துவிட்டார்.

"இந்த விசித்திர வாதத்தில் பெரும் சூழ்ச்சி இருக்கிறது. ஆறுமுகத்தைச் சுய உணர்வில்லாத பைத்தியம் என்று கூறி, தண்டனையைக் குறைக்கப் பார்க்கிறார், மிஸ்டர் நெடுமாறன்!" என்றார்.

"இல்லை......இல்லை, நீதிபதியவர்களே! இந்தப் பையனுக்கு புத்தி நல்ல நிலையில் இருக்கிறது என்பதை நான் மறுதலிக்கப் போவதில்லை. ஆனால் அவனுக்கு இருக்கும் மனோ நிலைக்கு உள்ள காரணமும், அவன் செய்ததாகக் கூறப்படும் கொலைகளுக்கு, அவன் எந்தளவு பொறுப்பாளி என்பதையும் தான் விளக்கப்போகிறேன்."

"கொலை செய்த பிறகு, அதில் பொறுப்பு என்ன?" என்று கோபமாக கேட்டார் கிஷ்ணசாமி.

"ஏன் பொறுப்பு இல்லை, மனி

தனின் மனோநிலைக்கு ஏற்றவாறு தான் குற்றங்கள் புரிகின்றான்?"

"மனோநிலை, மனோநிலை என்று கூறி, ஆறுமுகம் பைத்தியம் என்று நிரூபித்து, தப்பிக்கவைக்க எண்ணமா?"

"இல்லை...... இல்லை.........நிச்சயமாக இல்லை!"

"எது வேண்டுமானாலும் செய்யுங்கள். அரசாங்கம் இந்த வழக்கில் ஒரு துளியும் விட்டுக்கொடுக்கப் போவதில்லை!" என்று உரக்கக் கூறிவிட்டு உட்கார்ந்தார், கிருஷ்ணசாமி.

இதற்குள் நீதிபதி "அமைதி! அமைதி!!" என்று கூறி மேஜையைத் தட்டினார்.

நெடுமாறன் பேசாமல் உட்கார்ந்தார்.

"ஆறுமுகம்! — எழுந்து நில்!" என்றார் நீதிபதி.

உடனே ஆறுமுகத்தின் உடல் பூராவும் ஒரு உலுக்கு உலுக்கிற்று. உடலில் மின்சாரம் பாய்ச்சியது போல உணர்ச்சி. அந்த நேரத்திலே எழுந்து நிற்பதை விட, வேறெந்தக் காரியமும் மிகச் சுலபமாகத் தோன்றியது. உதடுகள் துடித்தன. கைகள் நடுங்க ஆரம்பித்தன. அப்படியே ஒரு நிமிஷம் நீதிபதியை முறைத்துப்பார்த்துக் கொண்டிருந்தான்.

இந்தப் பரிதாப நிலையைக் கவனித்த, நெடுமாறன் எழுந்து அவனருகில் வந்தார். அவன் கையைப் பிடித்தவண்ணம், "எழுந்திரு, ஆறுமுகம்! தைரியமாக இரு!" என்று மெதுவாகக் கூறினார்.

நெடுமாறனைப் பார்த்தவண்ணமே, மெதுவாக எழுந்து நின்றான், ஆறுமுகம்.

"நீ படித்திருக்கிறாயா, ஆறுமுகம்? என்று முதல் கேள்விகேட்டார் நீதிபதி.

"ஐந்தாவது வரை படித்திருக்கிறேனுங்க!" என்று முணகினான், ஆறுமுகம்.

"இப்பொழுது இங்கு சாட்டப்பட்டிருக்கும் குற்றங்களை நீ ஒத்துக்கொண்டு, நீ 'குற்றவாளி' என்று கூறிக் கொண்டால், உனக்கு ஆயுள் சிறையோ, தூக்குத் தண்டனையோ அல்லது பதினான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனையோ கொடுக்கப்படலாம்; இது உனக்குப் புரிகிறதா?

ஆறுமுகம் திகைப்போடு நெடுமாறனைப் பார்த்தான்.

நீதிபதி கேட்ட கேள்விக்கு பதில் கூறுமாறு, அவர் தலையை அசைத்தார்.

"ஆறுமுகம், நான் கூறியது உனக்குப் புரியாவிட்டால், சீக்கிரம் கூறு" என்று அதட்டினார், நீதிபதி.

"இல்லை சார், நீங்கள் சொன்னது நன்கு புரிகிறது" என்று இழுத்தான்.

"பின், நன்குபுரிந்துகொண்டும் 'குற்றவாளி' என்று ஒத்துக்கொள்கிறாயா?"

"ஹாம்...... ஆமாங்க......"

"அப்படியானால் சரி; நீ உட்காரலாம்" என்று கூறிவிட்டுக் கிருஷ்ணசாமி பக்கம் திரும்பி "வழக்குக்குத் தேவையான சாட்சியங்களைக்கொண்டு வர. அரசாங்கம் தயாராயிருக்கிறதா?" என்று கேட்டார், நீதிபதி.

"எஸ், யுவர் ஹானர்!" என்று கூறிக்கொண்டே எழுந்து முன் வந்தார் சர்க்கார்வக்கீல் கிருஷ்ணசாமி.

"நீதிபதியவர்களே! இந்த நேரத்திலே என்வாதம் மிகக் குறைந்த அளவிலேதான் இருக்கப் போகிறது. இந்த ஆறுமுகம் செய்தபயங்கரக்கொலைகளைப் பற்றிய பூராவிபரமும் ரெக்கார்டுகளில் தெளிவாக இருக்கின்றன. அவைகளை கீழ்க் கோர்ட்டில் அவனே ஒத்துக்கொண்டிருக்கிறான்.

இந்த வழக்கிலே சட்டத்தின் நுணுக்கமும், சுருக்கிவிழும் கட்டங்களும் விவாதிக்கத் தேவையே இல்லை. எல்லாம் தெளிவாக நம் கண்முன் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

இருந்தும் குற்றவாளியின் மனோநிலையும், அவனுக்கும் குற்றத்திற்கும் உள்ள பங்கு, விகிதாச்சாரத்தையும் பற்றி இங்கு பேசப்படுகிறது! ஆனால் இந்த நேரத்திலே ஒன்றை மாத்திரம் நான் ஞாபகப்படுத்துகிறேன்.

என்னுடைய நாற்பது வருஷ வக்கீல் வாழ்க்கையில் இவ்வளவு உயர்ந்த இடத்தில் இவ்வளவு கோரமாக நடத்தப்பட்ட கொலைக்கு வாதிட்டதுமில்லை; இவ்வளவுசாட்சிகள் கிடைத்த கொலைக்கேசும் இல்லை. வழக்கில், தெருக்கோடியில் பிரசங்கங்கள் புரிவதுபோல், இந்த நீதி மண்டபத்திலும் ஏதாவது பேசிக் குற்றவாளியை விடுவித்துவிடலாமென்று நினைத்தால் அது மந்திரமா, தந்திரமாஎன்றுஎனக்குப் புரியவில்லை! என்னவிருந்தாலும், ஒன்றுமாத்திரம் நிச்சயம். இந்த இடத்திலே நீதிவழங்கப்பட வேண்டும். அதற்கு மாறாக 'மனோ நிலை'கள் விவாதிக்கப்பட்டுப் பரிதாப உணர்ச்சிகள் தோன்றினால்' இந்த வழக்கின் முடிவுக்காகக் காத்துக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான நன்மக்களுக்கு நான் பதில் கூறமுடியாது. என்னுடைய பதவியைராஜினாமாச்செய்துவிட்டு, அவர்களுடைய வாழ்க்கை, சொத்துசுகம் எதையும் பாதுகாக்க என்னால் முடியாது என்று கூற வேண்டியதுதான்!

யுவர் ஹானர்! இந்த ஆறுமுகம் பைத்தியமல்ல. நல்லபுத்தியோடு இருக்கிறான் என்பதை எந்த நேரத்திலும் நிரூபிக்க அரசாங்கம் தயார். ஆகவே 'குற்றவாளி' நான் தான் என்று ஒத்துக் கொண்டபின், அவன் தூக்குமேடைக்குத்தான் அனுப்பப்பட வேண்டும்!

இவ்வளவுதான் நான் முதலில் விளக்கவேண்டுமென்றுநினைத்தது. இப்பொழுது சாட்சிகளைக் கூப்பிடலாமா? "என்று கூறிமுடித்தார், கிருஷ்ணசாமி.

நெடுமாறன் எழுந்து, "எத்தனை சாட்சிகள் விசாரிக்கப் போகிறீர்கள்" என்றார்.

"நாற்பது......!" என்றார்கிருஷ்ணசாமி.

"நாற்பதா......? நீதிபதியவர்களே! குற்றங்களை ஒப்புக்கொண்ட பிறகும், ஆறுமுகத்திற்கெதிராக நாற்பது சாட்சிகளா?"

"நாற்பது, கூட போதாது! இப்பொழுது இருக்கும் நேரத்தைப் பொறுத்து, இது. ஆறுமுகம் நல்ல, சுய புத்தியோடு திட்டமிட்டுச் செய்த கொலைகள்தான் இவை என்பதை நிரூபிக்க நாற்பது சாட்சிகள் கூட வேண்டாமா?" என்று கூறிக்கொண்டே நீதிபதியருகில் வந்தார் கிருஷ்ணசாமி.

ஒரு நிமிஷம் நீதிபதி நெடுமாறனையும், கிருஷ்ணசாமியையும் மாறி மாறிப் பார்த்தார், பின், "அரசாங்கம் தன் சாட்சிகளை விசாரிக்கலாம்" என்றார்.

கிருஷ்ணசாமி வெற்றிப் பார்வையோடு திரும்பித் தன் நாற்காலியில் போய் அமர்ந்தார்.

(தொடரும்)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஐதர் — நீ, வீரனாயிருப்பதைப் பற்றி, எனக்கு எப்போதுமே ஆட்சேபமில்லை. ஆனால், அரசை நிர்வகிக்கும் அமைச்சரராகவும், ஆலோசனையாளராகவும் ஆகமுயல்வதென்பது, முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவதுபோலாகும். குருவித் தலையில், பனங்காயை வைக்க முடியுமா? யாராவது வைக்கவந்தாலும், அந்தக்குருவி ஏற்றுக்கொள்ளலாமா! உனக்கு, அந்த விவேகம், இல்லை. உனது நண்பன், நான். நாளையதினம், ராஜ்ய பாரத்தைத் தாங்கி, நீ அடையப் போகும் ஆபத்துக்களை நினைத்துப் பார்த்தேன். நெஞ்சம் பொறுக்கவில்லை. நீயும் நானும் எவ்வளவு நாள் பழகியிருக்கிறோம். அதனால் தான், இப்படிச் செய்தேன்! ஒரு போர்—பல பிணம் — இரத்தமும் ஓடிற்று; பரவாயில்லை! உனக்குப் புத்தி வந்ததே—அது போதும். ஐதர்! நீ, இன்றுமுதல், சாதாரண வீரனாக அல்ல—முன்புபோல, தளபதியாகவும் இரு. ஆனால், அரசாள ஆசைப் படாதே. போய்வா!"

மீண்டும், ஐதர், தளபதியானான். காந்தாராவுக்கு, ஐதரை மட்டம் தட்டியதுமட்டுமன்றி, நாமே மன்னிப்பும் வழங்கினோம் — இனி, நம்மையே நத்திக் கிடப்பான் என்ற எண்ணம். ஐதரோ, 'என் காலடியில் ஒருபோது வீழ்ந்தவன். இன்று அவன் காலடியில் நான் தண்டனிட்டேன். அவன் இவ்வளவு ஏற்றம் பெறக் காரணம் என்ன? அவன் சென்ற பாதை. அதே பாதையில் நானும் செல்லுகிறேன்; இவனை வெல்லுகிறேன்'' என்று கருவிக்கொண்டான். மூளை வேலை செய்யலாயிற்று. சதி உருவாயிற்று. அதன்விளைவு, பல கடிதங்கள் தயாரிக்கப்பட்டன — காந்தா ராவின் அரசியல் அதிகாரிகளுக்கு.

"அன்புடையவர்களே!

உங்களுக்கு, எல்லாவித இன்பமும், விரைவில் ஏற்படக் காத்திருக்கிறது. என்னுடைய இடத்திலிருந்துகொண்டு உங்களையெல்லாம் காந்தாராவ் கஷ்டப்படுத்துவதைப்பற்றி உங்கள் மூலம் கேள்விப்படும்போது என் உள்ளம்குமுறுகிறது. என்னசெய்வேன்? கொஞ்சநாள் போகட்டும்; என்னிடம் முன்புவாக்களித்தபடி, எப்படியாவது அந்தத் தக்காணப் பிராமணனைப் பிடித்துக் கொடுத்து விடுங்கள். அவனுக்குச் சித்ர வதை; உங்களுக்குப் புதுவாழ்வு''

இப்படிக்கு,
உங்கள் மாஜி முதல்வன்
நஞ்சராஜ்.

இப்படிக் கடிதங்கள் — ஒன்றல்ல, பல. ஒரு அதிகாரிக்கு என்றல்ல, பலருக்கு. இந்தக் கடிதங்கள் யாவும், அந்த அதிகாரிகளிடம் போய்விடாமல் காந்தாராவ் கையிலேயே சிக்குமாறும் ஏற்பாடு செய்தான், ஐதர். கடிதங்களைக் கண்ட காந்தாராவ், பயந்தான்; எந்த நேரத்தில் என்ன நேருமோ என்றஞ்சி, தலைநகரான சீரங்கப்பட்டணம் சென்றான். முகாம், தலைவன் இல்லாத இடமாயிற்று. பாய்ந்தான், ஐதர். சேனைகள் சிதறின—பழி தீர்த்துக் கொண்டான்; வென்றான். விரைந்து சென்றான், சீரங்கப்பட்டணம். இழந்த இடத்தில் போய் அமர்ந்தான். எடுப்பார் கைப்பிள்ளையாக இருந்த அரசனால் எதுவும் செய்ய முடியவில்லை—ஐதரோ, 'எங்கே அந்த காந்தாராவ்' என்று கேட்டான். அரண்மனைக்குள் ஒளிந்திருக்கும் விஷயம் வெளிப்பட்டது. அவனைப் பிடித்துவரச் செய்தான், ஐதர்.

''ஐதர்—உனக்கு உதவிசெய்தவன் என்பதை மறந்திருக்கமாட்டாய் என்று நம்புகிறேன்'' என்று ஈனஸ்வரத்தில், காந்தாராவ், பேசத்தொடங்கினான்.

''நிச்சயமாக, காந்தாராவ்! நீ, எனக்குச் செய்திருக்கும் பேருதவியை மறக்கமாட்டேன். யாராலும் செய்ய முடியாத உதவியை யல்லவா செய்திருக்கிறாய் — அந்த உதவி கிடைத்திருக்கவில்லையென்றால், நான் பழைய ஐதராகியிருக்கமுடியாதே—இன்று''

''கேலி செய்கிறாயா, என்னை?''

''கேலியா? உண்மையய்யரே, இது உண்மை! அன்பு செலுத்திய என்னை வீழ்த்த முயன்று, நீர் சென்ற பாதையிருக்கிறதே, அந்தப் பாதையில் நடந்தே இன்று நான் வெற்றிபெற்றேன். மிகவும் உன்னதமான பாதை, அது. மாளிகையை மண்மேடாக்கும்—சாம்ராஜ்யத்தை சாம்பல் மேடாக்கும் —சாம்பல் மேட்டில் சாம்ராஜ்யத்தைச் சிருஷ்டிக்கும்—வீரனை வீழ்த்தும்—வீழ்ந்தவனை உயர்த்தும்—அந்தப் பாதையிருக்கிறதே, சூழ்ச்சிப்பாதை, அதை எனக்கு வாயால் அல்ல; செயலால் காட்டிய சீலரல்லவா, நீர். நீர் செய்த இப்பேருதவியை, மறப்பேனா நான்? உமக்கு என்றும் கடமைப்பட்டிருக்கிறேன், நான்,'

''வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதுபோலிருக்கிறது, உன் சொல்''

''உம்முடைய எதிரில் வந்து நின்றேனே, அன்றோர் நாள். அன்று எனக்கும் அப்படித்தானிருந்தது''

''ஆனால், நான் மன்னித்தேன் உன்னை. விரும்பியிருந்தால், சாகடித்திருக்கலாம்....''

''நானும் இப்போது நினைத்தால் உம்மைக் கண்டதுண்டமாக்கமுடியும். ஆனால், மன்னிக்கத் தயாராயிருக்கிறேன்''

''உண்மையாகவா!''

''முன்பே சொன்னேனே; நீர் சென்ற பாதையில் செல்பவன் நானென்று.

''அப்படியானால், எனக்குப் பழைய இடத்தைத் தருவாயா?''

''நிச்சயமாக. உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் தந்து செல்லப் பிள்ளையைப்போல உமக்கு முன்பு ஆதரவு தந்தேன்—இப்போதும், அதே ஆதரவைத் தரத் தயங்கேன்......''

''உனக்கு எப்படி நன்றி செலுத்துவேன்......'' என்றான், காந்தாராவ்.

ஐதர், தான்அளித்த வாக்கை நிறைவேற்றத் தயங்கவில்லை. வேளா வேளைக்குப் பழம், பால், ருசியான உணவு, விதவிதமான ஆடைகள்—எல்லாம் தந்தான். எப்படி? அழகான இரும்புக் கூண்டு ஒன்று மிகப் பெரிதாகச் செய்து, அதற்குள் வைத்து!! காந்தாராவ், சீறினான், ஐதரிடம். ''இதுதானா, நீ கூறிய உறுதிமொழியின் இலட்சணம்''

''என்ன குறை உனக்கு? கிளிபோல் பாதுகாப்பேன் என்றேன்; அது போலவே வைத்திருக்கிறேன். கிளியை யாராவது திறந்துவிடுவார்களோ? அதைக் கூண்டுக்குள் அடைத்து வைத்திருப்பது, பார்த்து ரசிக்கவும், பலருக்குக் காட்டி மகிழவும் தானே. உன்னையும் அதுபோலவே நடத்துகிறேன்—வருவோர் போவோருக்கெல்லாம் காட்டுகிறேன். நீ காட்டிய பாதையையும் கூறுகிறேன். செல்லக்கிளியே-சீறாமல் கிட'' என்று கதவைப் பூட்டிக்கொண்டு போய்விட்டான்.

காந்தாராவ், கம்பிகளைப் பிடித்துக் கொண்டு நின்றான்.

பிறகு, ஐதர், பல வெற்றிகளைப் பெற்றுச் சரிதஏட்டில் இடம்பெற்றான்.

ஐதர் பெற்ற வெற்றிகள் எல்லோருக்கும் தெரியும் — ஆனால், இந்தச் சம்பவம் Charles Kincaid என்பார் எழுதிய 'ஐதர் அலி'யின் வாழ்க்கை வரலாற்றைப் படித்தோர் மட்டுமே அறிவர்.

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi St, Kancheepuram.